**அரசு ஊழியர்**

மார்ச் 2019

மலர் : 40 இதழ் : 3

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*

## சூடா ஒரு கோப்பை சூப்

### இது முடிவல்ல!

விடியாத இரவென்று
எதுவுமில்லை,
முடியாத துயரென்று
எதுவுமில்லை,
வடியாத வெள்ளமென்று
எதுவுமில்லை,
விழாத வாழ்க்கையென்று
எதுவுமில்லை!

- **தணிகைச்செல்வன்**

# நெஞ்சில் மூண்ட நெருப்புக்கு சமரசம் ஏது?

அரசு ஊழியர் - ஆசிரியர் கோரிக்கைகளுக் காகவும், எதிர்கால சந்ததியினரின் வேலை வாய்ப்புக்காகவும் போராட்ட களம் கண்ட ஜாக்டோ-ஜியோ அமைப்பினை அழைத்துப் பேசி தீர்வு காண வலியுறுத்தி வரலாறு காணாத அளவில் கலந்து கொண்டு வீரச்சமர் புரிந்த ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வீரம் செறிந்த வாழ்த்துக்கள். என்றென்றும், உங்கள் தியாகம் வீண் போகாது.

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனவரி 22 முதல் 30 வரை நடந்த ஜாக்டோ-ஜியோ காலவரையற்ற வேலை நிறுத்தம் ஒரு வரலாற்றுப் பதிவாகும். இதுவரை நடந்த போராட்டங்களைவிட உக்கிரமாக நடந்தது. இந்தியாவின் குடியரசு தினத்தன்று, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சிறையில் சித்ரவதை அனுபவித்த நாளாகும்.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர தீர்வு காணாத தமிழக அரசு, அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் அச்சுறுத்தியது. போராட் டத்தை சீர்குலைத்தது. நள்ளிரவு வரை உணவு, குடிநீர், மின்சாரம் அற்ற சூழலில் கைது செய்து வைத்திருந்தது. பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டது. பெண்கள் உட்பட போராட்டக் காரர்களை இரவு நேரத்தில் வீடு புகுந்து கைது செய்தது. பள்ளி மட்டங்களில் ஆளும் கட்சியின் அதிகாரமிக்கோர் நேரடியாக மிரட்டியது. தற்காலிக ஆசிரியர்களை நியமனம் செய்ய முயற்சித்தது. போராடுபவர்களை இடை நீக்கம் செய்தது. ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டது. சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களை நிர்வாணமாக்கியது. பெண்களின் தலைமுடியை பிடித்து இழுத்தும் சென்றது. லத்தி சார்ஜ் செய்வேன் என மிரட்டியது. ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களையும், கல்லூரி பேராசிரியர் களையும் பணி மாறுதல் செய்தது என பல கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.

சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர் கள், அரசு ஊழியர்கள், பெண்கள் உட்பட சிறையில் அடைத்தது. இவர்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை வீரஞ்செறிந்த வாழ்த்துக்கள்.

அடக்குமுறையினால் போராட்டங்களை கட்டுப்படுத்தியதாக வரலாறு இல்லை என்பது ஆளும் தமிழக அரசுக்கு நன்கு தெரிந்த பாடம் தான். இருப்பினும் அதே பாதையில் தொடர்ந்தது, போராட்டம் வெற்றியடைந்து விடக் கூடாது

என்பதற்காகத்தான். இக்காலகட்டத்தில் நீதி மன்றங்களும் மவுனம் சாதித்தது கவலைக்குரியது.

இவ்வளவு அச்சுறுத்தலுக்கு மத்தியில் போராட்டம் சக்தியாக நடந்தது. பல்வேறு அமைப்புகள் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தன. சிறை சென்று தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் நமது தொடர் முயற்சியால் மீண்டும் பணி ஏற்கச் செய்துள்ளோம்.

ஆனாலும் நமது இலக்குகள் இன்றும் முடியவில்லை. போராட்டத்தில் பங்கேற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள், குற்றவியல் நடவடிக்கைகள், பணி மாறுதல் நடவடிக்கைகள் இன்னும் நிலுவையில் உள்ளன. உச்சபட்சமான மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது குறித்து நீதிமன்றம் கவலை கொண்டுள்ளதாக தெரியவில்லை. ஒட்டுமொத்தமாக அரசு ஒரு அடக்குமுறை கருவி என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்திருக்கிறது.

ஊடகங்களும், நீதிமன்றங்களும், அரசுடன் கை கோர்த்து நமக்கு எதிராக நடந்து கொண்டதைத் தான் பார்க்க முடிந்தது. காரணம் முதலாளித் துவமும், ஏகாதிபத்தியமும் தோற்றுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தது.

போரும், போராட்டமும் வேறு வேறு. போர் அன்றே தொடங்கி அன்றே வெற்றி தோல்வியை முடிவு செய்யும். போராட்டம் அப்படியல்ல. அடக்குமுறையையும், அச்சுறுத்தலையும் பழிவாங்கும் நடவடிக்கைகளையும் பார்த்து பார்த்து அடுத்தடுத்து போராடத் தூண்டுவதுதான் போராட்டம். போராட்டத்திற்கு எந்த எல்லையும் இல்லை. மனிதன் உள்ளவரை போராட்டமும் தொடரும் என்பதை உணராதவர்களுக்கு மீண்டும் மீண்டும் உணர்த்த வேண்டிய பாதையில் தொடர்ந்து செல்வதுதான் நமது கடமையாகும். அந்த வகையில் நடந்து முடிந்த ஜாக்டோ-ஜியோவின் போராட்டமும் தொழிலாளி வர்க்கத்தின் கடமையாகும்.

தொழிலாளி வர்க்க சார்புடைய எந்தப் போராட்டமும் தோற்றதாக வரலாறு இல்லை. நியாயமான முறையில் போராடிய நம்மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கும், நம்மை சிறைக்கு அனுப்பியவர்களுக்கும்தான் காணாமல் போன வரலாறும், சிறைக்கு சென்ற வரலாறும் நடந்தேறியுள்ளது. நமது உரிமைகள் அத்தனையும் நிர்ணயிக்கிறது அரசியல்தான் என்பது உண்மை. அப்பட்டமான சரியான அரசியலை, அதுவும் மக்களுக்கான அரசியலை நாமும் உணர்ந்து கொண்டு செயலாற்ற வேண்டிய தேர்தல் காலம் ஒரு முறையல்ல, நமது காலம் முழுவதும்.

நமக்கான உரிமைகளை மீட்டெடுக்கிற பயணத்தில் எந்த தடை வந்தாலும், அத்துணையும் தகர்த்தெறிந்து வெற்றி பெற்றிருக்கிற வரலாற்றை மீண்டும் மீண்டும் படைப்போம். அதிகார வர்க்கத்தின் ஆணவங்களையும், எல்லை மீறிய அடக்குமுறையையும் உச்சபட்ச மனித உரிமை மீறலையும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நியாயமான போராட்டத்தின் போது ஏவிவிடப்பட்ட இந்த அரசு உணர்ந்து கொள்ளும் வகையில் தக்க பாடம் புகட்டுவோம்.

மார்ச் 8ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம். மகளிரை மதிக்காத இந்த அரசுக்கு சர்வதேச மகளிர் தினத்தன்று மாலை கூடி உரிமைக்கான போராட்டத்தை மாபெரும் ஆர்ப்பாட்டம் மூலம் உணர்த்திடுவோம். ஆம், “நெஞ்சில் மூண்ட நெருப்புக்கு சமரசம் ஏதுமில்லை”. மகளிர் தின வாழ்த்துக்களுடன். ◣

## கண்ணீர் அஞ்சலி



ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் பங்கெடுத்து சிறை சென்ற ஆசிரியர் சிவா மாரடைப்பால் மரணம். சிறை வந்தவர்களிலேயே இளையவர், திருமணமாகி ஓராண்டுகூட நிறைவடையாதவர்.

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் கூம்பள்ளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணியாற்றிய தோழர். சிவா அவர்கள் தொடர் மன நெருக்கடியால் ...... அன்று அதிகாலை மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்துள்ளார்.

ஜாக்டோ-ஜியோ அன்னாருக்கு சிரம் தாழ்த்த அஞ்சலியை தெரிவித்துக் கொள்கிறது.

# மண்ணில் தெரியுது வானம், அது நம் கையில் வசப்படலாகும்!

கவிஞர் கந்தர்வன் அவர்களின் இந்த கவிதை வரிகள் இப்போதையச் சூழலுக்கு முற்றிலும் பொருந்திப் போகிறது பாருங்கள்.



**புறாக்களும், குயில்களும்**
**வயல்களில் இரைதேடி**
**அலையும்போது**
**பருந்துகள் வானில்**
**உற்சாகமாய்ப் பறக்கின்றன**

## அரிதாரம் பூசிய அரசின் பொய்முகம்

சரித்திரம் படைத்த மாமனிதர்களைப் பற்றி நாம் படித்திருக்கிறோம்.

“உன்னையே நீ அறிவாய்'' என்று ஏதென்ஸ் நகரத்து இளைஞர் சமூகத்தைச் சிந்திக்கத் தூண்டிய சாக்ரடீஸுக்குக் கிடைத்தது ‘சமூக விரோதி’ பட்டமும், விஷம் குடித்து உயிரைத் தீர்த்துக் கொள்ளும் தீர்ப்பும்.

உரிமை கேட்பு போராட்டத்தை முதலில் கையிலெடுத்த ஏசுவுக்குக் கிடைத்ததோ ‘கலகக்காரன்’ பட்டம். “சீசருக்குரியதை சீசருக்குக் கொடுங்கள்'' என்று அவர் கூறியபோது அவர் பார்வையின் தீட்சண்யத்தை நேரடியாக எதிர்கொள்ள இயலாத யூதகுருமார்கள், மக்கட் கூட்டத்தை ஏவி ‘இவனைச் சிலுவையில் அறையுங்கள்’ என்று கூக்குரலிட வைத்தனர்.

“உலகம் உருண்டையானது'' என்ற கலிலியோவை ஒரு சமூகம் கல்லால் அடித்தே கொன்றது. பேராலயத்தில் காற்றில் அசைந்து கொண்டிருந்த அலங்கார விளக்கினை உற்று நோக்கி தனி ஊசல் தத்துவம் தந்தவரும் வானமண்டலத்தைக் கூர்ந்தறிய தொலைநோக்கியைக் காட்டியவரும் அவரே.

“கண்டுகொண்டேன், கண்டுகொண்டேன்'' என்று தண்ணீர் தொட்டியிலிருந்து இறங்கி அரை நிர்வாணமாய் தெருவீதியில் ஓடிய ஆர்க்கிமிடிஸை தடுத்து நிறுத்திக் கேட்டவர்களிடம் நான் என்னுடைய எடையை கண்டுபிடித்து விட்டேன் என்று புளங்காகிதத்துடன் கூறியபோது இவன் ஒரு ‘அரைப்பைத்தியம்’ என்றது சுற்றி நின்று சிரித்தது ஒரு கூட்டம்.

அரியணையில் அமர்ந்தபோதும் சுடுகாட்டில் வாழ்ந்தபோதும் நிலைபிறழாத அரிச்சந்திரனை ‘வாழத் தெரியாதவன்’ என்று எள்ளி நகைத்தது இந்த மண்ணில் நடந்த சம்பவம்தான்.

“மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கையினி உண்டோ?'' என பாரதி விடுத்த ‘புதியதோர் உலகம் செய்வோம்’ அறைகூவல் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் ஆணிவேரை உலுக்கிய போது “பைத்தியக்காரன்'' என கல்லெறிந்து விரட்டியது அச்சமூகம். உலகம் அதைக்கண்டு நகைத்தது.

அந்த வரிசையில் இன்று ஜாக்டோ-ஜியோ கையிலெடுத்த போராட்டம் “சமூக நலனுக்கானது எதிர்கால இளைஞர்களின் கௌரவமான வாழ்க்கைக்கானது'' என்கிற நிதர்சனம். “இது அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கான போராட்டம்'' என்ற பொய்ப்பிரச்சாரத்தினாலும் போலி அறிக்கைகளாலும் மக்களின் வெறுப்புக்கான போராட்டமாக சித்தரிக்கப்பட்டுவிட்டது.



### மக்கள் நலனுக்கான போராட்டம் மக்களுக்கெதிரான போராட்டமாக சித்தரிக்கப்பட்டது

ஜாக்டோ-ஜியோ போராட்டமானது தேர்வு வருகிறது என்பதற்காகவோ, தேர்தல் வருகிறது என்பதற்காகவோ திட்டமிடப்பட்ட போராட்டமல்ல . அதேபோல இது சம்பள உயர்வைக் கேட்டு நடத்தப்பட்ட போராட்டமும் அல்ல. ஆனால் முதல்வர் முதற்கொண்டு அமைச்சர்கள் வரை வாய்கிழிய பேசினார்கள், ''நாடே நிதிச்சுமையில் சிக்கித் தவிக்கும்போது அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஊதிய உயர்வு கேட்டு போராடலாமா?'' என்று. நாங்கள் ஊதிய உயர்வு கேட்கவில்லை ஊதிய மாற்றத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளை சரிசெய்யத்தான் கேட்கிறோம், எதிர்கால இளைஞர்களின் வேலை வாய்ப்புகள் அற்றுப்போய்விடக்கூடாதே என்றுதான் போராடுகிறோம், அரசுத்துறைகள் அனைத்தும் தனியார் மயமாக்கப்பட்டுவிடக்கூடாதே என்பதற்காகத்தான் வீதியில் இறங்கி நிற்கிறோம் என்று நாம் செய்த பிரச்சாரங்களும் பேட்டிகளும் மக்கள் மத்தியில் எடுபடவில்லை.

### வர்க்கப் பார்வைகளும் அதிகார வர்க்கங்களும்

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இந்த போராட்டத்தில் ஒரே நாளில் குதித்துவிடவில்லை. நம்முடைய உரிமைக்காக பொதுமக்களையும் மாணவர்களையும் பாதிக்காத வகையிலான பலகட்ட போராட்டங்களை நடத்தியும் அரசு கண்டுகொள்ளாத நிலையில்தான் வேறுவழியின்றி காலவரையற்ற வேலை நிறுத்தத்திற்கு நிர்பந்திக்கப் பட்டோம். ஊதிய முரண்பாடுகளை ஊதிய உயர்வு என்று ஊதி பெரிதுபடுத்தினார்கள் அமைச்சர்கள். ஏற்கெனவே ரூ.50,000/- சம்பளம் வாங்கும் ஆசிரியர்கள் இன்னும் சம்பளம் கேட்டுப் போராடலாமா என்று மக்களை திசைதிருப்பினார்கள். இந்நிலையில் ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு, ஐபிஎஸ் அதிகாரிகளுக்கு அமைச்சர்களுக்கு, எம்எல்ஏக்களுக்கு தாராளமான சம்பளம் உயர்த்தினார்கள்.

அப்போது நிதிச்சுமை இல்லையாம் இந்த அரசாங்கத்திற்கு. ஆனால் அடிமட்டத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நியாயமான ஊதியம் கேட்டாலே ஏற்கெனவே பெறுவதே அதிக ஊதியம் என்று அங்கலாய்க்கிறார்கள். இந்த அரசு உண்மையிலேயே அரசியலமைப்புச் சட்டப்படியும் ஜனநாயக நெறிப்படியும் செயல்படும் அரசு என்றால் ஐஏஎஸ் ஐபிஎஸ், அமைச்சர்கள், எம்எல்ஏக்களுக்கு ஊதிய நிலுவையை, சம்பளத்தை உயர்த்தாமல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களிடம் சொல்லியிருக்க வேண்டும், நிதிநிலை பற்றாக்குறையால் யாருக்கும் சம்பளம் உயர்த்தப்படவில்லை, ஊதிய நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை என்று. ஒரு ஜனநாயக அரசு மேல் தட்டு மக்களுக்கு ஒருவிதமான நீதியையும் நடுத்தர மற்றும் கீழ்த்தட்டு மக்களுக்கு வேறுவிதமான நியதியையும் வகுப்பது குற்றச்செயலுக்கு ஈடானதாகும். அத்தகையதொரு செயலைச் செய்துவிட்டு ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் ஏற்கெனவே பெறும் சம்பளமே அதிகம் என்று ஒரு முதலமைச்சரே பேசுவது அரிதாரம் பூசிய அரசின் பொய்முகமாகும். நம்முடைய நியாயங்கள் மக்களுக்கு சென்றடைய விடாமல் மக்களை திசைதிருப்பி ஊதிய உயர்வுக்காக போராடுவதாக சித்தரித்தது பொய் முகத்தின் நயவஞ்சகமாகும்.

### வடிகட்டிய பொய்கள்தான் அமைச்சர் ஜெயக்குமாரின் அறிக்கை

பொய் அறிக்கைப்புலி என்ற புனைப்பெயரை அமைச்சர் ஜெயக்குமாருக்கு வழங்கவேண்டிய அளவுக்கு அவர் தன் கற்பனைத்திறத்தையும் மீறி பொய்களை வாரிச்சுருட்டி அறிக்கை தயாரித்து அரசு செலவில் வெளியிட்டு அதையும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் செலவில் சேர்த்திருக்கிறார். அவர் தன் அறிக்கையில் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் 71 சதவீதம் அரசின் வருவாயிலிருந்து செலவிடப்படுவதாக சொல்லியிருப்பது மக்களுக்கு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்திட முக்கியக் காரணமாக அமைந்தது.

ஆனால் அந்த அறிக்கையில் அவர் பட்டியலிட்டிருக்கும் இனங்களைப் பார்த்தாலே அனைவருக்கும் புரியும் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான செலவினம் என்பது 40 சதவீதத்திற்கு மேல் இல்லை என்பதாக வேண்டுமென்றே அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தின்று கொழுத்து போராட்டம் நடத்துகிறார்கள் என்ற செயற்கையான எதிர்மறை கருத்தை மக்களிடம் அமைச்சர் ஜெயக்குமார் அவர்களும் செங்கோட்டையனும் திட்டமிட்டு விதைத்தார்கள்.

### அரசின் உண்மையான நோக்கம் மக்கள் நலன் மாணவர் நலன் இல்லை

தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய வேலை வாய்ப்புகளை, வாழ்வாதாரத்தை அழித்துவிடக்கூடிய அரசாணை எண்.56ஐ தீயிட்டுக் கொளுத்தி போராட்டம் நடத்தினோம் நாம். அரசு கண்டுகொள்ளவில்லை. காலிப்பணியிடங்களை நிரப்புங்கள் அப்போதுதான் அரசு அலுவலகத்தில் மக்களுக்கான பணி செய்ய முடியும் என்றோம். கவனத்தில் கொள்ளவில்லை. அரசுப்பள்ளிகளை மூடாதீர்கள்

என்று சொன்னோம் காதில்போட்டுக்கொள்ளவில்லை. 3500 சத்துணவு மையங்களை மூடாதீர்கள் என்றோம். கடுகளவும் அவர்கள் எடுத்த முடிவிலிருந்து அசையவில்லை. இவை பற்றியெல்லாம் முதலமைச்சரோ நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சரோ உயர்கல்வி அமைச்சரோ மக்களிடம் வாய்திறக்கவில்லை. அவர்களின் நோக்கமெல்லாம் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கு எதிராக பொதுமக்களை திசைதிருப்புவதாக மட்டுமே இருந்ததே தவிர அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நியாயமான பிரச்னைகளை கேட்டு நிர்வாகத்தை சரிசெய்ய வேண்டும் என்றோ மாணவர்கள் நலனை காக்க வேண்டும் என்பதாகவோ இல்லை.

### பொய்ப்பிரச்சாரத்திற்கு பலிகடாவான ஆசிரியர்கள்

கல்வி அமைச்சர் செங்கோட்டையன் பள்ளிக்கு வராதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். ஆசிரியர்கள் யாரும் அசராத நிலையில் அடுத்த கட்டமாக தற்காலிக ஆசிரியர்கள் அத்துக்கூலி ரூ.7500/- சம்பளத்தில் எடுக்கப்படுவார்கள் என்றார். அதற்கும் ஆசிரியர்கள் பயப்படவில்லை. அதேசமயம் ரூ.7500/- என்ற சொற்பக்கூலிக்கு ஆட்கள் வராமல் போகவே அதற்கடுத்த நாள் ரூ.10000/- தருகிறேன் வாருங்கள் என்று கூவி ஏலம் விட்டார். வேலைவாய்ப்பற்ற இளைஞர்களும் யுவதிகளும் போய் நின்றார்கள் வரிசையில். அங்கே அவர்களது சான்றிதழ்களை வாங்கி சரிபார்ப்பதற்கு ஆட்கள் இல்லை. சில இடங்களில் எப்போது விண்ணப்பம் தருவீர்கள் என்று வேலைக்கு சேருவதற்கு முன்பே இளைஞர்கள் போராட ஆரம்பித்துவிட்டார்கள். இந்த அறிவிப்புகள் எல்லாம் வெறும் கண்துடைப்புகள் என்ற நிலையில் வேலைக்கு வராத ஆசிரியர்களுக்கு தவணைகள் மேல் தவணைகள் வழங்கப்பட்டு இன்று மாலைக்குள் பணிக்கு சேரவேண்டும், இல்லாவிட்டால் அந்த இடம் காலிப்பணியிடமாக கருதப்படும். நாளை காலைக்குள் எஸ்எம்எஸ் அனுப்பி பள்ளிக்கு வரும் விவரத்தை தெரிவித்தால் கூட போதுமானது என்ற அறிவிப்புகளும் வந்துகொண்டே இருந்தன.

ஊடகங்களில் குடியரசு தின விழாவுக்காக ஆசிரியர்கள் பள்ளிகளுக்கு சென்றபோது ஒன்றிரண்டு பள்ளிகளில் பெற்றோர்கள் அவர்கள் குடியரசு தின விழாவை நடத்த விடாமல் தடுத்த வீடியோ காட்சி திரும்பத் திரும்ப ஊடகங்களில் காட்டப்பட்டுக்கொண்டே இருந்தன. சில இடங்களில் பள்ளிகள் திறக்கப்படாததை கண்டித்து பெற்றோர்கள் சாலைமறியல் நடத்திய சம்பவங்களும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியைகளை பெரும் மனஉளைச்சலுக்கு ஆளாக்கியது. நீதிபதிகள் சொல்லியும் தமிழக முதல்வர் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களை அழைத்து பேசாததும் தேர்வுக்கான நேரம் நெருங்கி வரும் வேளையில் பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு பள்ளிக்குச் செல்ல பல தரப்பிலிருந்தும் ஆசிரியர்களுக்கு நெருக்கடிகள் வந்த வண்ணமிருந்ததாலும் பெரும்பாலான ஆசிரியைகள், ஆசிரியர்கள் 29.01.2019 அன்று அரசின் பொய்ப்பிரச்சாரத்துக்கு பலிகடாவானார்கள்..

### தொழிற்சங்க ரீதியாக வளர்தெடுக்கப்படாததே போராட்டம் எதிர்பார்த்த வெற்றியடையாததற்கு காரணம்

அரசுத் தரப்பில் இத்தனை கடுமைகள் காட்டி அடக்குமுறைகள் வீசப்பட்ட நிலையிலும் போராட்டக் களத்தில் நின்ற பெரும்பான்மையான ஆசிரியைகளுக்கு வீரஞ்செறிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அதே நேரத்தில் சங்கத் தலைமையிடம் கூட பணிக்குத் திரும்புவதைத் தெரிவிக்காமல் பணிக்கு திரும்பிய ஆசிரியர்கள் ஆசிரியைகளின் செயல்பாட்டுக்குக் காரணம் அவர்கள் தொழிற்சங்க ரீதியாக வளர்தெடுக்கப்படாததுதான் என்பது இப்போது தெளிவாகியுள்ளது. 1984 மற்றும் 1988ல் நடந்த போராட்டங்களில் ஆசிரியைகள்தான் பெரும்பாலும் போராட்டக் களத்தில் இருந்தார்கள் சிறைக்குள் அடைத்தபோதும் அதற்காக கவலைப்படவில்லை. போராட்ட காலத்தில் கர்ப்பிணி ஆசிரியை ஒருவர் சிறையிலேயே பிள்ளை பெற்ற வரலாறும் ஜாக்டோ ஜியோவிற்கு உண்டு.

2003ஆம் ஆண்டு ஒரே அரசாணையில் ஜெயலலிதா அம்மையார் 1,76,000/- அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை டிஸ்மிஸ் செய்தபோதும் ஆசிரியச் சமுதாயம் அசரவில்லை. அத்தகைய உறுதிபாடு கொண்டவர்கள் வழிவந்தவர்களா இன்று இப்படி செய்துவிட்டார்கள் என்ற கேள்வி எழுவது நியாயம்தான் என்றாலும் அதற்குக் காரணம் அவர்களின் சங்கத்தலைமைகளே. அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஆசிரியர் ஆசிரியைகளுக்கு போராட்டம் நடத்தப்படும் விதத்தையும், தொழிற்சங்க பயிற்சியையும் கற்றுத்தரவேண்டிய கடமையை உணர வேண்டும். தொழிற்சங்க பயிற்சி இல்லாமல் போராடப்போனால் மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டே இருக்கும். நாம் செய்வது சரியா? தவறா?. எப்போது ஸ்டிரைக் முடியும் என்று தெரியவில்லையே என்ற வினாக்கள் எழுந்துகொண்டே இருக்கும். தொழிற்சங்க ரீதியான பயிற்சிகள் இருந்தால் மட்டுமே இவையெல்லாம் போராட்டத்தின் அங்கங்கள் என்பதை மனம் ஏற்றுக்கொள்ளும்.

சிறையே சென்றாலும் பணியே போனாலும் தலைமை இட்ட கட்டளையையும், கூட்டமைப்பு மேற்கொண்ட தீர்மானத்தையும் நிறைவேற்றுவது மட்டுமே நெஞ்சில் இருக்கும். பணியில் பாதிப்பு ஏற்பட்டால் சங்கம் நம்மை நிச்சயம் காக்கும் என்ற அசையாத மன உறுதியை விதைக்க வேண்டியவர்கள் சங்கத்தலைவர்களே. அப்போதுதான் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் நம்மை எத்தகைய இன்னலிலிருந்தும் காப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்திருக்கும். ஆக இனி ஒவ்வொரு சங்கத்தலைவரும் போராட்ட காலங்களுக்கு முன்பு ஆசிரியர் ஆசிரியைகள் ஊழியர்களை போராட்டத்துக்கேற்ப பயிற்றுவிக்க வேண்டிய அவசியம் உணர வேண்டும். அப்போதுதான் நாம் இனிமேல் இதுபோன்ற காலவரையற்ற போராட்டங்களை உக்கிரமாகக் கையிலெடுத்து வெற்றியை வசமாக்க முடியும். அதிகார வர்க்கத்தின் எந்த சவால்களையும் சந்திக்கும் மனப்பக்குவமும், முட்டி மோதும் துணிவும் வரும். வளரும்.

## கேடாய் முடிந்த கூடா நட்பு

167 சங்கங்களும் அதன் உறுப்பினர்கள் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் பேரும் அரசுக்கு எதிராக போராட்ட அறிவிப்பினை கொடுத்த நிலையில், நடக்கும் நிகழ்வுகளை நாள்தோறும் பார்த்துக்கொண்டிருந்த தலைமைச் செயலக சங்கம், அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்ற பெயரில் லெட்டர்பேடு சங்கம் நடத்திக் கொண்டிருக்கும் அரசு அலுவலர் ஒன்றியத்துடன் சேர்ந்து முதல்வருக்கு பூச்செண்டுகள் கொடுத்து தாங்கள் போராடப்போவதில்லை எனவும் அரசுக்கு ஆதரவாக இருப்பதாகவும் பேட்டியளித்தார்கள். முதல்வர் தங்களின் கோரிக்கையை பரிசீலிப்பதாக சொல்லியிருக்கிறார் என்று பேட்டியளித்தார்கள். 2017ல் இதே போன்றதொரு காலவரையற்ற போராட்டத்தை கையிலெடுத்தபோது கழன்று ஓடிய அதே தோரணையில் மீண்டும் ஒரு கபடநாடகம் நடந்தது. முதல்வர் நிச்சயமாய் சொல்லியிருக்கிறார் கண்டிப்பாக செய்வார் யாரும் வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என பேட்டியளித்தார்கள்.

உண்மையில் இவர்கள் முதல்வரிடம் பேசினார்களா அல்லது பூச்செண்டு மட்டும் கொடுத்துவிட்டு கூட இருந்தவர்கள் காதில் பூச்சுற்றினார்களா என்பது அடுத்த 24 மணி நேரத்தில் தெரிந்துவிட்டது அமைச்சர் ஜெயக்குமார் அறிக்கை வாயிலாக. கூடா நட்பு கேடாய் முடியும் என்று தமிழில் ஒரு பழமொழி சொல்வார்கள். அது தலைமைச் செயலக சங்கத்திற்கே உரித்தானதாக மாறியது. அங்கே பங்களிப்பு ஓய்வூதியத்தில் பணியாற்றும் ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு இவர்களின் பொய் முகம் தெரிந்துவிட்டது. ஜாக்டோ ஜியோவிற்கு ஆதரவாக அங்கே ஊழியர்கள் குரலெழுப்ப நேர்ந்துவிட்ட நெருக்கடியால் அங்கீகரிக்கப்பட்ட லெட்டர்பேட் சங்கங்கள் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அறிவித்தன. அதிலும்கூட தர்ணா, உண்ணாவிரதம் என்று காலந்தள்ளி பிப்ரவரி 1ம் தேதியிலிருந்து வேலைநிறுத்தம் போக முடிவு செய்தார்கள்.

தலைமைச் செயலக சங்கம் முதலிலேயே வந்திருந்தால் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கும் 21 மாத ஊதிய நிலுவைக்கும் முக்கிய முடிவுகள் கிடைத்திருக்கும். ஆனால் கூடா நட்பினால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய உரிமைகளை தடுத்து கேடு விளைவித்தவர்கள் ஆனார்கள். அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தலைவர்களுக்கு எப்போதும் தாங்கள் வானத்திலிருந்து குதித்தவர்கள் போன்ற எண்ணம் இருக்கும். செயல்படுவார்கள். முதல்வருடனும் அமைச்சருடனும் மட்டும்தான் பேசுவார்கள் பிறதுறை சங்கங்களுடன் பேச மாட்டார்கள். ஏனென்றால் தெருவில் இறங்கி போராடினால் தங்கள் கௌரவம் கெட்டுபோகும் என்ற வறட்டு சித்தாந்தத்தில் சங்கம் நடத்துபவர்கள் இவர்கள். மக்கள் நம் போராட்டத்தை பொய்பிரச்சாரத்தை நம்பி கொச்சைபடுத்தியிருந்தாலும் அதை நாம் மன்னித்துவிடலாம். ஆனால் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்ற பெயரில் அனைத்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் உரிமைகளை போராடிப் பெறக்கூட விடாமல் ஆளும் அரசின் கூஜாக்களாக, காசுக்கு வேஷம் போடும் ராஜாக்களாக இருக்கும் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்று சொல்லிக்கொண்டு பூச்செண்டுகளோடு முதல்வர், அமைச்சர்கள் அலுவலகங்களில் அலைந்து கொண்டிருக்கும் இவர்களை எந்த அரசு ஊழியரும் ஆசிரியரும் மன்னிக்க மாட்டார்கள்.

இந்த போராட்டத்தில் அங்கிருந்து கலந்து கொண்டவர்களில் 8 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருப்பது ஜாக்டோ ஜியோவின் விதை தலைமை செயலகத்திற்குள் விதைக்கப்பட்டுள்ளது என்பதற்கான அடையாளமாகும். தலைமை செயலக சங்கத்தின் இந்த நிலை இனி மாறும். மற்ற துறை ஊழியர்களும் அரசுப்பள்ளி ஆசிரியர்களும் போராட்டக்களத்தில் அரசுடன் மார்தட்டி நின்றபோதும் அரசின் அடக்குமுறைகளுக்கு ஆளான போதும் வேடிக்கை பார்த்த அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் தவறான முடிவுகள் இன்று அனைத்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் உரிமைகளுக்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவிற்கு முக்கிய காரணம். கெஞ்சி கெஞ்சி பேசி பூச்செண்டு கொடுத்தே அமைச்சர்களின் அடிமைகளாகிப்போன இவர்கள் தங்கள் மடமைக்கு வருந்தும் நாள் வந்தே தீரும். தலைமைச் செயலக

ஊழியர்கள் 8 பேர் சஸ்பெண்ட் ஆனதற்கு தலைமைச் செயலகச் சங்கம் என்ன செய்யுமோ தெரியாது. ஆனால் நாம் அவர்களை பாதுகாத்து மீட்டெடுக்கும் பணியில் துணிச்சலுடன் காரியமாற்றி வெற்றி பெறுவோம்.

## பெரும்பாலான மகளிர் பங்கேற்பு இந்த இயக்கத்தின் வலிமையை உரைக்கும் உரைகல்

சுமார் ஐந்து லட்சம் பேர் பங்கேற்ற போராட்டத்தில் அரசுத்துறைகளை சேர்ந்த மகளிரும் ஆசிரியைகளும் மட்டுமே சரிபாதிக்கு மேலானவர்களாக இருந்தார்கள் என்பது இந்த அரசாங்கத்தை பயமுறுத்திய செயலாகும். அதனால்தான் உயர்கல்வி அமைச்சரும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சரும் ஏட்டிக்கு போட்டியாக மாற்றி மாற்றி ஊடகத்தில் பேட்டியளித்தார்கள். போராட்ட களமும் போர்க்களமும் வேறு வேறல்ல என்பதை நிரூபிக்கும் விதமாக பங்கேற்பளித்த அனைத்துத்துறை மகளிர்க்கும் ஆசிரியைகளுக்கும் நமது வீரஞ்செறிந்த வாழ்த்துக்கள்.

## சிறைக்கு சென்ற தோழர்களுக்கு நிறைவான பாராட்டுக்கள்

போராட்டத்தில் வீரத்துடன் ஈடுபட்டு சிறைசெல்லவும் தயங்காது ஜாக்டோ ஜியோ இயக்கத்தின் வலிமையை உலகுக்கு பறைசாற்றிய ஒவ்வொரு தோழருக்கும் ஜாக்டோ ஜியோவின் அனைத்து உறுப்பினர்களும் தனித்தனியே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களின் பங்களிப்பு நல்லதொரு உதாரணமாக உணரப்பட்டுள்ளது. அவர்களை வழக்குகளிலிருந்து மீட்கும் நடவடிக்கைகளிலும் பாதிப்புகள் ஏற்படாமல் காக்கும் நடவடிக்கைகளிலும் இந்த இயக்கம் தொய்வில்லாமல் தன் கடமையை ஆற்றும் என்ற உறுதிமொழியை உரித்தாக்குகிறோம்.

## நீதிமன்றங்களின் சமநிலை போக்கு நம்முடைய நியாயமான உரிமைகளுக்கான அத்தாட்சி

சென்றமுறை ஜாக்டோ ஜியோ காலவரையற்ற வேலைநிறுத்தத்தை மேற்கொண்டபோது மதுரை உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் மதுரை உயர்நீதிமன்றம் நமது தரப்பை கேட்காமலேயே தடை உத்தரவு பிறப்பித்ததும் அதையும் மீறி நாம் போராடிய போது ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்து அவ்வழக்கில் நமது போராட்டங்களுக்கான நியாயமான காரணங்களை தெரிவித்த பின்னர் நீதிமன்றம் அரசை ஊதிய மாற்றத்தை அறிவிக்கப் பணித்தது. இந்தமுறை நீதிமன்றமே நமது போராட்டத்தை தவிர்க்க இயலாத நிலையை புரிந்து கொண்டு அரசிடம் இந்த வழக்கில் நாங்கள் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாது. ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்களுடன் பேசி பிரச்னைகளை தீர்க்கப்பாருங்கள் என அறிவுறுத்தியது.

அதன்பிறகு சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்குரைஞரின் மகன் கோகுல் என்ற மாணவனின் பேரில் வழக்குபோட்டு அம்மாணவனின் கல்வி உரிமை தடுக்கப்படுவதாக முறையிட்டபோது அதை ஏற்க மறுத்து தனி நீதிபதியின் நீதிமன்றத்தில் வழக்கை திரும்பப் பெற்றுக்கொண்டு இரண்டு நீதிபதிகள் அமர்வின் முன் வழக்கை கொண்டு வந்தபோதும் அவர்களும் நம்முடைய காலவரையற்ற வேலை நிறுத்தப்போராட்டத்திற்குத் தடை விதிக்காமல் மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர்கள் பள்ளிக்கு திரும்ப வேண்டும் என்றும் அரசாங்கம் போராடும் சங்கங்களின் தலைவர்களை அழைத்துப்பேசி பிரச்னைகளை தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டும் என்றும் அறிவுறுத்தியது. அதேபோல் மதுரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தனி வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆக நீதிமன்றங்கள் நம்முடைய நியாயமான கோரிக்கைகளை உணர்ந்து செயல்பட்டு அரசாங்கத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கின என்றால் அது மிகையில்லை. இது நாம் நியாயமாக போராடுகிறோம் நமக்கான நியாயமான உரிமைகளுக்காக போராடுகிறோம் என்பதற்கான அத்தாட்சியாகும்.

## போராட்டங்களை ஆதரித்த தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும்

நம்முடைய போராட்டங்கள் நடக்கும் போதெல்லாம் கூட இருந்து ஆதரிக்கும் அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அதன் தலைவர்களுக்கும். அரசியல் கட்சி தலைவர்களுக்கும் நாம் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். அவர்கள்தான் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் போராட்டத்தை உடனே பேசி தீர்வு காணுங்கள் என்று அரசுக்கு அடிக்கடி கோரிக்கை வைத்துக் கொண்டே இருந்தார்கள். அரசியல் கட்சிகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 31.01.2019ம் தேதி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு எதிராக மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவிப்பு விட்டிருந்தார்கள். அவர்களின் ஆதரவில்லாமல் இத்தனை பெரிய போராட்டம் உலகின் கவனத்தை ஈர்த்திருக்காது. நம்முடைய நியாயமான கோரிக்கைகளை இந்த அரசாங்கம் கூப்பிட்டுப் பேசி தீர்க்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை எச்சரிக்கை அறிக்கை என பல வடிவங்களிலும் ஆதரவளித்த அனைத்து தொழிற்சங்கத் தோழர்களுக்கும், வாலிபர்,

மாணவர் மற்றும் மாதர் அமைப்புகளிலிருந்தும்,பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் நாம் நன்றி சொல்ல கடன் பட்டிருக்கிறோம். வார்த்தைகளால் அல்ல நம்முடைய எதிர்வரும் அடுத்த கட்ட போராட்ட வெற்றிகளின் மூலம் அவர்கள் தந்த ஆதரவுக்கு மரியாதை செய்வோம்.

## எதிர்வரும் காலத்தில் நாம் செய்ய வேண்டியது

நம்முடைய போராட்டத்தில் முதல் சுற்று முடிந்திருக்கிறது. அடுத்த சுற்றுக்கு நாம் நம்மை ஆயத்தப் படுத்திக் கொள்ள வேண்டிய சின்ன இடைவெளி இப்போது நமக்கு கிடைத்திருக்கிறது. இந்த இடைவெளியில் நாம் நம்முடைய அடுத்தகட்ட போராட்டத்துக்கான அனைத்துப் பணிகளையும் செய்து முடித்துவிட வேணடும். அடுத்த சுற்று என்பது இறுதிச் சுற்றாகக்கூட இருக்கலாம். தேர்வு வந்தாலும் தேர்தல் வந்தாலும் நாம் நமது அரசுப்பணியை வேலைக் கலாச்சாரத்திற்குட்பட்டு செய்து கொண்டு உரிமைகளுக்காக போராடிக்கொண்டே இருக்க வேண்டும். போராட்டங்களில் பங்கேற்கும் முதல் தலைமுறை அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்கள் போராட்ட காலத்தில் எப்படி செயல்படவேண்டும் என்ற தொழிற்சங்கப் பயிற்சியை நாம் கற்றுக் கொடுக்கவேண்டும்.

வருகின்ற 17வது நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் நம்முன் மிகப்பெரும் சவால்கள் எதிர்நோக்கியுள்ளன. மத்திய, மாநில அரசுகள் நவீன தாராளமயக் கொள்கைகளை முன்னிலும் விரைந்து அமல்படுத்திவரும் நிலையில், எதிர்கால அரசு பணிவாய்ப்புகள் இளைஞர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன. சமீப காலங்களில் அரசுப் பணிக்கு வந்துள்ள இளைஞர்களுக்கு ஓய்வூதியம் மட்டுமன்றி பணி உத்திரவாதமற்ற சூழல் ஏற்படுத்தப்படுகிறது. தற்போது பணிக்கு வந்துள்ள இளைய சமுதாயத்தினருக்கு தமது பாதிப்புகளை உணர்ந்து போராடும் பயிற்சியின்றி உள்ளனர், தற்போது நாம் நடத்திவரும் போராட்டம் என்பது வெறும் பொருளாதார கோரிக்கைகளுக்கான போரட்டமாக சித்தரிக்கப்பட்டு நம்மை பலவீனப்படுத்தும் முயற்சிகள் முறியடிக்கபட வேண்டியுள்ளது. உண்மையில் நாம் முன்னெடுத்துள்ள போராட்டம் புதிய தாராளமயக் கொள்கைகளால் சீரழிக்கப்பட்டு வருகிற அனைத்து பகுதி மக்களின் கோரிக்கைகளை உள்ளடக்கிய போராட்டம் என்ற சமூக-அரசியல் போராட்டமாகும். இப்போராட்டம் முன்னோக்கி செல்ல வேண்டுமாயின், நமது ஊழியர்களை சமூக-அரசியல் உணர்வு கொள்ளச் செய்வதன் மூலமே அரசின் நாசகர கொள்கைகளை முறியடிக்க முடியும். ஆளுவோரின் ஊழியர் விரோத கொள்கைகளுக்கு எதிரான போராட்டத்தில் நாம் வெற்றிபெற நமது சமூக அரசியல் உணர்வு மட்டத்தை நமது ஊழியர்களிடம் உயர்த்திடும் பெரும் சவால் நம் முன் உள்ளது. தற்போதைய நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் 21 சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நமக்கு அளித்துள்ள பெருவாய்ப்பை நாம் சரியாக பயன்படுத்திட நமது சக்தி அனைத்தையும் பயன்படுத்தினாலன்றி நாம் நமது எதிர்கால போராட்டங்களை வடிவமைக்க இயலாது.

எனவே, நமது கோரிக்கைகள், அதன் தர்க்க நியாயங்கள், அதற்காக நாம் முன்னெடுத்த ஜனநாயக முறையிலான போராட்டங்கள், அரசு அதனை நயவஞ்சகமாக எதிர்கொண்ட விதம், இன்றைய நிலையில் நம்முன் உள்ள சவால்கள் குறித்து ஒவ்வொரு ஊழியரும் உணரும் வகையில் நமது பிரச்சாரத்தை வடிவமைத்து நமது சக்தியினை ஆட்சியாளர்களுக்கு உணர்த்திடும் வாய்ப்பாக இத்தேர்தல்களை நாம் பயன்படுத்திடுவோம்.

சாக்ரடீஸ் என்ற ஒரு மேதையைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் எது சொன்னாலும் சிந்தித்து சரியாகத்தான் சொல்வார் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு இளைஞன் பலர் இருந்து சபையில் அவர் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் அவரை முட்டாளாக்க வேண்டுமென்று தன் கையில் ஒரு வண்டை மூடிக்கொண்டு சாக்ரடீஸ் அவர்களைப் பார்த்து, “ஐயா என் கைக்குள் இருக்கும் வண்டு உயிருடன் இருக்கிறதா? அல்லது இறந்து விட்டதா?'' என்று கேட்டான். சாக்ரடீஸ் வண்டு இறந்துவிட்டது என்றால் கையைத் திறந்து வண்டு உயிரோடு இருப்பதை காட்டலாம், மாறாக சாக்ரடீஸ், வண்டு உயிருடன் இருக்கிறது என்றால் கைக்குள் இருக்கும் வண்டை நசுக்கிச் சாகடித்துவிட்டுக் காண்பிக்கலாம் என்று எண்ணினான். சாக்ரடீஸ் உதட்டிலிருந்து என்ன வார்த்தைகள் வரப்போகிறது என்று எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள். அவர் சற்றே யோசித்து விட்டு “வண்டு உயிரோடு இருப்பதும் இறந்துபோவதும் உன் கையில் இருக்கிறது'' என்று. அந்த இளைஞன் அந்தப் பதிலைக்கேட்டு தலை குனிந்தான். இதே போல்தான் நமக்கான நியாயமான உரிமைகள் எனும் வண்டை நாம் உயிருடன் காப்பது நம் கைகளில் இருக்கிறது என்பதை நினைவில் வைத்து அடுத்த கட்ட ஆயத்தங்களுக்கு நம்மை அர்ப்பணிப்போம். வெற்றிக்கனி கையில் எட்டும் வரை போராட்டக் கனலை பாதுகாப்போம்.

**கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்**
**கவர்ந்திட மாட்டவோ - அட,**
**மண்ணில் தெரியுது வானம், அது நம்**
**வசப்பட லாகாதோ?**
**எண்ணி யெண்ணிப்பல நாளும் முயன்றிங்**
**கிறுதியிற் சோர்வோமோ? - அட,**
**விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும் எண்ணிலும்**
**மேவு பராசக்தியே!**

**என்ன வரங்கள், பெருமைகள், வெற்றிகள்**
**எத்தனை மேன்மைகளோ?**
**தன்னை வென்றாலவை யாவும் பெறுவது**
**சத்திய மாகுமென்றே**
**முன்னை முவீவர் உரைத்த மறைபொருள்**
**முற்றுணர்ந்த பின்னும்**
**தன்னை வென்றாலும் திறமை பெறாதிங்கு**
**தாழ்வுற்று நிற்போமோ?**

- பாரதியார்

# சமாதானமே உலகின் தேவை

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் பனிப்போர் உச்சத்திலிருந்த நேரம். உலகமே பதட்டத்தில் ஆழ்ந்த தருணம். உலகத் தலைவர்கள் எல்லாம் கூடினார்கள்.

அப்போது ரஷ்ய ஜனாபதிபதியாக பிரஸ்னேவ் இருந்தார். பிரஸ்னேவ் நினைத்தால்தான் சமாதானத்தைக் கொண்டுவர முடியும் என்று அனைவரும் கருதினார்கள். பிரஸ்னேவ்விடம் பேசுவதற்கு யாரை அனுப்பலாம் என்று ஆலோசித்தார்கள். இறுதியில் அன்றைய பிரான்ஸ் ஜனாதிபதியான மித்ரண்டை அனுப்புதென முடிவு முடிவு செய்கிறார்கள்.

மித்ரண்ட் மாஸ்கோ சென்று பிரேஸ்னேவைச் சந்திக்கிறார். எதிரெதிரே இருவரும் அமர்ந்திருக்கிறார்கள்.

பிரஸ்னேவ் தன் மேஜையின் டிராவைத் திறந்து இரண்டு புகைப்படங்களை எடுத்து டேபிளில் போடுகிறார் இரண்டுமே பிரஸ்னேவின் புகைப் படங்களே.

ஒருபடத்தில் போர் வீரன் உடையுடனும் இன்னொரு படத்தில் சிவில் உடையுடனும் இருக்கிறார்.

“இந்த இரண்டு படங்களில் உங்களுக்கு எந்தப் படம் பிடித்திருக்கிறது” என்று கேட்கிறார் பிரஸ்னேவ். எதைச் சொல்லுவது என்று தடுமாறுகிறார் மித்ரண்ட்.

மித்ரண்டின் தர்மசங்கடத்தைப் புரிந்துகொண்ட பிரஸ்னேவ் அவரே விடையும் சொல்கிறார்.

எனக்கு சிவில் உடையில் இருக்கும் படம்தான் பிடிக்கும் என்கிறார். அதற்கான காரணத்தையும் சொல்கிறார்,

"எனக்கு ஏன் போர்வீரனின் உடை பிடிக்கவில்லை தெரியுமா? எனக்குப் போரே பிடிக்காது என்றவர், ஒரு யுத்தத்தில் எவ்வளவு ஆயுதங்கள் பயன்படுத்தப் பட்டன? எவ்வளவு கட்டிடங்கள் அழிக்கப்பட்டன என்பதையெல்லாம் இன்றைய விஞ்ஞானத்தால் கணக்கிட்டு விடமுடியும், ஆனால் கணவனை இழந்த ஒருமனைவியின் கண்ணீரையோ மகனை இழந்து தவிக்கும் ஒரு தாயினுடைய துக்கத்தையோ எந்த விஞ்ஞானத்தாலும் கணக்கிட்டுவிட முடியாது. அப்படிவொரு சாதனம் இதுவரை கண்டுபிடிக்கப் படவில்லை.

அதனால்தான் எனக்குப் போரே பிடிக்காது " என்றாராம் பிரஸ்னேவ்.

இதுபற்றி மித்ரண்ட் சொல்கிறார் "நான் பிரஸ்னேவைச் சந்திக்கப் போகும்போது யுத்தம் என்பது எவ்வளவு கொடுமையானது என்பதை விளக்குவதற்காக பல புள்ளிவிவரங்களைக் கொண்டு சென்றேன். அதற்கு வேலையே இல்லாமல் செய்துவிட்டார் பிரஸ்னேவ். அதற்குமேல் யுத்தத்தைப் பற்றி யாராவது சொல்லமுடியுமா?" என்று.

**சமாதானமே உலகின் தேவை.**

நன்றி : **மதுரை பாலன்**

**- நாகை ஏ.ட்டீ.அன்பழகன்**

# சரிநிகர் சமானமாய் பெண்கள்...!

ஒவ்வொரு பெண்ணும் வளரும் போதும் வாழும் போதும் அவள் ஒரு பெண் என்று சமூகத்தால் உணர்த்தப்படுகிறாள். இது அவளை மனரீதியாக மாறுபட்டவள் என்பதை உணர்த்துவதற்காக அல்ல. மாறாக அவளுடைய சமூக பாத்திரத்தை உணர்த்தவும், அவளுடைய எல்லைகளை நினைவுபடுத்தவும், சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரையறைகளை தாண்டும் போது வன்மையாக கண்டிப்பதற்காகவும் மட்டுமே. சமூகம் எப்போதும் பெண்ணின் மீதான கண்காணிப்பை தொடர்ந்து செய்து கொண்டே இருக்கும்.

ஒரு பெண், தான் விரும்பும் கல்வியை கற்று சமூகத்தில் தான் என்னவாக இருக்க வேண்டும், எத்தகைய போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என தன் நோக்கத்தை, லட்சியத்தை வளர்த்துக் கொள்வது இன்றைக்கும் சாத்தியமற்றதாக உள்ளது. சுதந்திரமான சூழல் பெண்களை காட்டிலும் ஆண்களுக்கு வாய்க்கப் பெறுகிறது. தங்களுக்கு எவ்வளவு அநீதிகள் இழைக்கப் பட்டாலும் அதை எதிர்த்து தொடர்ந்து போராடிக் கொண்டே இருப்பது பெண் சமூகம்தான். பாலியல் துன்புறுத்தல், பணியிடங்களில் சமமான மரியாதை, தனி மனித சுதந்திரம் இவ்வாறு பல காரணங்களுக்காக பெண் சமூகம் தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கிறது.

அந்த போராட்டத்திற்கு நடுவிலும் பெண்கள் சாதிக்க தவறுவதே இல்லை. சாதனை ஆண்களையே எப்போதும் முன்னுதாரணம் காட்டி பேசும் இந்த சமூகம் பெண் சாதனையாளர்களை போகின்ற போக்கில் மட்டுமே பேசும். இப்படிப்பட்ட சமூகத்திலும் கலை முதல் அறிவியல் வரை அனைத்து துறைகளிலும் தற்போது தடம் பதிப்பதும் ஒரு போராட்டமே.

பெண்களுக்கு எதிரான அனைத்துவிதமான பாகுபாடுகளையும் களைவதற்காக சர்வதேச உடன்படிக்கை 1979-ல் உருவாக்கப்பட்டது. சமத்துவம், வேலை வாய்ப்பு, அரசியல், சமூக தளங்களில் பங்கேற்பதில் உள்ள பாகுபாட்டை களைந்திட Convention for Eliminations of All Forms of Discrimination (CEDAW) இது உலகம் முழுவதும் பெண்களுடைய உரிமைகள் பற்றி அரசுகள் உரத்து சிந்திப்பதற்கும், தங்களுடைய நாட்டில் உள்ள பாகுபாடுகளை களைவதற்குமான உறுதிப் பாட்டை வெளிப்படுத்துவதற்கும் அந்த உடன்படிக்கை வாய்ப்பை ஏற்படுத்தியது.

உடன்படிக்கையில் 1993ஆம் ஆண்டு இந்தியா கையெழுத்திட்டது. இந்த உடன்படிக்கையை நடைமுறைக்கு கொண்டு வரும் நோக்கோடு இதற்காக அமைக்கப்பட்ட குழுவின் முன் இந்தியா 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தனது அறிக்கையை அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்கும்போது சர்வதேச உடன்படிக்கை கூறும் 16 பிரிவுகளின் அடிப்படையிலும் தமது நாட்டின் நிலைமைகள் குறித்தும் தெரிவிக்க வேண்டும். ஆனால் இந்தியா மட்டுமல்ல பிற ஆசிய நாடுகள் கூட பெயரளவிற்கு மட்டுமே தருகின்றன. நமது நாட்டை பொறுத்தவரை இந்தியாவின் பெண்கள் அமைப்பின் தேசிய கூட்டமைப்பு (NAWO) ஒவ்வொரு முறையும் நிழல் அறிக்கை ஒன்றை தயாரித்து இந்திய பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள், பாகுபாடுகள், அவற்றால் இந்திய பெண்கள் படும் அல்லல்கள், அவற்றை பற்றிய இந்திய அரசின் பார்வை போன்ற விசயங்களை உள்ளடக்கி (CEDAW) சீடா கமிட்டி உறுப்பினர்களை நேரில் சந்தித்து தமது கருத்துக்களையும், உண்மை நிலையையும் அப்பணிக் குழு புரிந்து கொள்ள ஏதுவாக அளிக்கிறது.

பெண்கள் அனைத்து தளங்களிலும் எதிர்கொள்ளும் பல பிற்போக்கு பிரச்சனைகளை களையும் விதத்தில் இந்தியாவில் சில புதிய சட்டங்கள் இயற்றப்பட்டாலும் இந்த சட்டங்கள் சமூகத்தில் நிலைகொண்டு விட்ட பெண்களுக்கு எதிரான பிரச்சனைகளை முதலில் அங்கீகரிக் கின்றன. அதனை களைவதற்காக பெண்களுக்கு எதிரான குற்றங்களை புரிவோர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க உதவும் நிலையில் இல்லாமல் ஆள்வோர் மற்றும் அரசியல் தளங்களில் தங்களுக்கு சாதகமாக வளைத்துக் கொள்ளும் நிலையே உள்ளது. சட்டத்தைப் பயன்படுத்தி நியாயம் பெறுவதிலும், நீதிமன்றத்தை அணுகி பிரச்சனைகளை களைவதிலும் பெரும் சிக்கல் உள்ளது. அதன் நோக்கமும், அதனை நடைமுறைப்படுத்துவர்களுக்கும், நீதி மன்றங்களுக்கும் இருப்பதில்லை.

மத்திய, மாநில அரசுகள் கடைப்பிடித்து வரும் பொருளாதாரக் கொள்கைகளால் சாதாரண மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருவதை பார்க்கின்றோம். பெண்களின் வேலை வாய்ப்பு இந்தியாவில் ஒட்டுமொத்தமாக முன்னேற்றம் இருந்தாலும் மிகக் கணிசமாக பெண்கள் விவசாய தொழிலாளர்களாகவும், 67 சதவீதம் தினக்கூலி, குறைந்தபட்ச கூலியில் 12 மணி நேரத்திற்கும் மேல் உழைப்பு சுரண்டலை கொடுப்பவர்களாக உள்ளனர். பெண்களின் உழைப்பு அரசுத் துறைகளிலும் மறுசீரமைப்பு என்ற அடிப்படையில் சம வேலைக்கு சம ஊதியம்

மறுக்கப்பட்டு தொழிற்சங்க உரிமைகளும் காலில் போட்டு மிதிக்கப்படுகிறது.

தீப்பெட்டி, பீடி, நெசவு போன்ற தொழில்கள் நவீனமயமாக்கப்பட்டு வருவதால் பெண்களின் வேலைகள் பறிபோகின்றன. விவசாயத் துறையில் எந்திரமயமாதலும், பயிர் உற்பத்தி முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களாலும், பெண்களின் வேலை வாய்ப்பு குறைந்து வருகிறது. முறைசாராத் தொழிலாளர்களாக பணியாற்றும் பெண்களின் வேலை நிலைமைகள் மோசமாக உள்ளது. நீண்ட காலமாக செயல்பட்டு வரும் பஞ்சாலைகளில் நிரந்தரத் தொழிலாளர்களாக பணியாற்றிவர்கள் கணிசமாக ஆட்குறைப்பு செய்யப்பட்டுள்ளனர். அரசின் புதிய தொழிற் கொள்கையில் தமிழகத்தின் கிராமப்புறப் பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள சிறு பஞ்சாலை களில் எவ்வித சட்டப் பாதுகாப்புமின்றி குறைந்த கூலிக்கு “சுமங்கலித் திட்டம்” என்ற பெயரில் ஏராளமான பெண்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

சத்துணவு, அங்கன்வாடி, ஊராட்சி செயலர், ஊரக வளர்ச்சித் துறை, வருவாய்த் துறை, மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம், காவல் துறை உள்ளிட்டு அனைத்து துறைகளிலும் கணிசமான பெண்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தாலும் கணினிமயம் என்ற நிலையில் 8 மணி நேர வேலைக்கு அரசு வேட்டு வைத்துக் கொண்டிருக்கும் நிலையில் அரசாணை 56 மூலம் பல ஆண்டுகளாக ஓய்வு, விருப்ப ஓய்வு, மாறுதல் பணியிடங்கள் நிரப்பப் படாலும், குறைந்தபட்சம் 2 அல்லது 3 பணியிட பணிகளை பார்க்க கட்டாயப்படுத்தும் நிலையே நீடிப்பதை தமிழக அரசும், மத்திய அரசும் கேளாக்காதின ராகவே உள்ளதையும் தொடர்ச்சியான போராட் டங்களே வெளிக் கொணர்ந்துள்ளது.

பெண்கள் மீதான வன்முறையில் ஒரு பகுதியே வழக்குகளாக மாறுகின்றன. இவற்றிலும் ஒரு சில வழக்குகளிலேயே தண்டனை வழங்கப்படுகின்றன. பதிவாகும் வழக்குகளில் 3% வழக்குகளிலேயே தண்டனை தரப்பட்டதாக புள்ளி விவரம் தெரிவிக் கிறது. பெண்கள் மீதான தாக்குதல் அதிகரித்து வரும் அதே நேரத்தில் அவர்களிடையே விழிப்புணர்வும் அதிகரித்து வருவதை காண்கிறோம். இந்த விழிப்புணர்வின் தாக்கம் பல்வேறு அரசியல் இயக் கங்கள் மீதும் பிரதிபலிப்பை ஏற்படுத்தியுள்ளது. சட்டமன்றத் திலும், நாடாளுமன்றத்திலும் 33% இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கையும் வலுவடைந் துள்ளது. ஆனாலும் மத்தியில் ஆளும் பாஜக மற்றும் அரசு ஊதுகுழலாக உள்ள தமிழக அரசும் பெண்களின் அடிப்படை உரிமைகளையும், அரசமைப்பு சட்டத்தின் உரிமைகளையும் 1.சம உரிமை 2. சுதந்திர உரிமை 3. மத உரிமை 4. அரசமைப்பு சட்டத்தின் உரிமைகளை நீதிமன்றம் வாயிலாக உறுதி செய்யும் உரிமையை இந்தியா முழுவதும் மத்திய, மாநில அரசுகளால் முழுமை யாக மீறப்பட்டு அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ள பெண்களை மீண்டும் புராண, இதிகாச காலத்திற்கு இழுத்துச் செல்லும் நிகழ்வை போராடும் தொழிற் சங்கங்களுடன் இணைந்து பயணிக்க வேண்டிய நியாயத்தையும் நமக்கு உணர்த்துகிறது.

நாட்டின் பாதுகாப்பாக விளங்கும் நான்கு தூண்களும் வருவாய், நீதிமன்றம், சட்டமன்றம், பாராளுமன்றம், பிற்போக்குத்தனமான பத்திரி கைகள், கோரிக்கைகளின் நியாயம் தெளிவுபடுத்தாத பொதுமக்கள் புருவ நெறிப்பையும், ஆளும் வர்க்கம் தமக்கு சாதகமாக மாற்றிக் கொள்கிறது.

நாட்டில் வேலையின்மை, எரிபொருள் விலை யேற்றம், வாராக் கடன் அதிகரிப்பு போன்றவை கவலையளிக்கும் விசயமாக உருவெடுத்திருப்பதாக மத்திய நிதியமைச்சர் அருண்ஜேட்லி பொருளாதார ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மறுபுறம் வாயில் விளங்காத சமஸ்கிருத திட்டங்களால் மக்களையும், பெண்களுக்கு பல திட்டங்கள் தீட்டி வல்லமை மிக்கவர்களாக மாற்றப்படுவதாக ஏமாற்றி வருகின்றனர். மூட நம்பிக்கைகள் பெண்கள் மனதில் விதைக்கப்படுகின்றன.

மத்திய அமைச்சர்கள் அரசியல் சாசனத்தை நம்பவில்லை. பதவி பிரமாணத்தை மீறி பேசுகின் றனர். சாமான்ய மக்களின் உணவு, உடை, குழந்தை கள் பெரும் எண்ணிக்கையை மதவாதிகள் தீர்மானிக் கின்றனர். இந்தியாவின் பண்பாடும், பன்முக கலாச் சாரமும் குறிவைத்து தாக்கப்படுகிறது. உழைக்கும் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் முயற்சியில் மத்திய அரசு உள்ளது. பெண்ணுரிமையை, சமூக நீதியை பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் தொழிற்சங்க அமைப்புகள் உள்ளன.

பெண்கள் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். நமது மூவர்ண தேசியக் கொடியை அடையாளப்படுத்தி அளித்ததும் ஒரு பெண்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. உழைக்கும் பெண்களை போதைப் பொருளாக பார்க்கும் நிலை உள்ளது. சமீபத்தில் ஆளுநர் மாளிகையில் நடிகர் எஸ்.வி.சேகர் ஆகியோர் உழைக்கும் பெண்களுக்கு எதிராக பேசியதும், நடந்து கொண்ட விதமும் நாடே அறியும். அரசின் தவறான கொள்கைகளை எதிர்த்தும், பணிபுரியும் இடங்களில் நேரும் துன்புறுத்தலை எதிர்த்தும் பெண்கள் தைரியமாக குரல் எழுப்ப வேண்டும்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலேயே பெண்கள் சபரிமலை சென்று தரிசனம் செய்துள்ளனர். ஆனால், பெண்கள் கோயிலுக்குள் நுழைந்ததை தீட்டு என்றும், கோயிலை கழுவி விடுவதும், கோயிலை பூட்டுவதும் போன்ற விசித்திரமான நடவடிக்கைகள் இந்திய அரசமைப்பு சட்டத்தின் அடிப்படை உரிமை களை மதிக்காத மத்திய அரசின் போலித்தனத்தையும், பெண்களுக்காக பல திட்டங்களை அமுல்படுத்து வதாக நாள்தோறும் உளரும் பித்தலாட்டத் தன்மையையும் பெண்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

## ஜனநாயகத்தின் முக்கிய தூண் பத்திரிகை சுதந்திரம்

நமது நாடு முழுவதும் ஒவ்வொரு நாளும் பத்திரிகை மீதும், பத்திரிகையாளர்கள் மீதும், பத்திரிகை சுதந்திரத்தின் மீதும் ஆட்சியாளர்கள் தாக்குதலை கட்டவிழ்த்து வருகிறார்கள். ஆட்சி யாளர்களின் ஊழல்களையும், முறைகேடுகளை யும், மக்கள் விரோத கொள்கைகளையும் அமுல்படுத்தி எழுதுகிற பத்திரிகையாளர்கள் குறி வைத்து படுகொலை செய்யப்படுகின்ற பயங்கரங்கள் தொடர்கின்றன. பகுத்தறிவாளர் நரேந்திர தபோல்கர், வரலாற்று அறிஞர் கோவிந்த் பன்சாரே, மூத்த எழுத்தாளர் எம்.எம்.கல்புர்க்கி ஆகியோர் மதவாத சக்திகளால் கொடூரமாக சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்கள். காஷ்மீரில் 10 வயது பழங்குடி இனக் குழந்தை ஆஷிபா கோயிலின் கருவறையில் பல நாட்களாக வைத்து வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட நிகழ்வும், நாடு முழுவதும் பெண் பத்திரிகை யாளர்களுக்கு கடுமையான அச்சுறுத்தல் உள்ளதையும், மத்திய பாஜக அரசின் வெளியுறவுத் துறை இணையமைச்சராக உள்ள எம்.ஜே.அக்பர் பல்வேறு பத்திரிகையில் ஆசிரியர் உள்ளிட்ட பொறுப்புகளில் இருந்து செயல்பட்ட காலங்களில் தங்களை பாலியல் ரீதியாக வன்முறைக்கு உள்ளாக்கினார் என்று பெண் பத்திரிகையாளர் 10 பேர் பகிரங்கமாக குற்றம் சாட்டியும் நாடு முழுவதும் பத்திரிகையாளர்கள் சங்கம் போராட்டம் நடத்தியும்கூட பெண்களுக்கு நியாயம் கிடைக்காத நிலையே பல துறைகளிலும் நீடிப்பது இந்நூற்றாண்டின் விந்தையே.

மாட்டிறைச்சிக்கு தடை என்ற பெயரில் உணவு, உடை, உரிமை கூட கேள்விக் குறி, கலாச்சார காவலர்கள் என்று கூறிக்கொண்ட கயவர்களால் “காதலர் தினம்” கொண்டாடப்படுவது கூட பயங்கரவாத செயலாக மாறி யுள்ளது. மாட்டோடு மல்லு கட்டும் ஜல்லிக்கட்டை நடத்தக்கூட மத்திய அரசோடு தமிழர்கள் பெரும் போராட்டமாக மாறி அதிலும் பெண்கள் மீது அடக்குமுறை.

நீட் தேர்வு என்ற பெயரால் மாநிலங்களின் கல்வி உரிமை பாதிக்கப்பட்டு மாணவ செல்வங்கள் தற்கொலைக்கு தள்ளப்பட்டனர். வாயில் விளங்காத வார்த்தைகள் மூலம் மாணவிகளுக்கு நல்ல திட்டத்தை கொண்டு வந்திருப்பதாக ஓலமிடும் மத்திய அரசின் இச்செயலால் தேர்வு எழுதச் சென்ற பெண்களின் தலைமுடி அவிழ்த்து விடப்பட்டு, காதில், மூக்கில், கையில் உள்ள ஆபரணங்கள் கழற்றப் பட்டன.

மாணவிகளின் பாதுகாப்புக் கவசமாக விளங்கும் துப்பட்டா (மேல் ஆடையை) அப்புறப்படுத்தப் பட்டு நீட் என்ற நிகழ்வில் நிகழ்கால திரவுபதிகளாக துகில் உரியப்பட்ட நிகழ்வில் கூனிக் குறுகிய எங்களது மாணவ செல்வங்களும் நெஞ்சினில் கொண்டிருக்கிறார்கள் மீண்டும் ஒரு ஜல்லிக்கட்டு நடத்த.

## ஜனநாயகத்தின் மற்றுமோர் தூண்: மக்கள்

தற்போதைய மத்திய, மாநில ஆட்சி காலத்தில் பெண்களுக்கு எதிராக கவுரவ கொலை தலைதூக்கியுள்ளது. சென்னை தாம்பரம் ஹாசினி, அரியலூர் நந்தினி, எண்ணூர் சுனாமி குடியிருப் பில் 3 வயது பெண் குழந்தை என கொல்லப் படுவதும், குழந்தைகள் மீது அடுத்தடுத்து நிகழ்த்தப்பட்ட மிக மோசமான வன்கொடுமைகள் சமூகத்திற்கு அவப்பெயரை உண்டாக்கியுள்ளது. ஜல்லிக்கட்டு போராட்டத்தின்போது சென்னை உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் போராடும் மாணவிகள், இளைஞர்கள், பெண்கள் மீதான தாக்குதல் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் தூத்துக்குடி துப்பாக்கி சூடு (ஸ்னோலின் 16 வயது மாணவியின் வாயில் சுட்டது) இறப்பு.

நீட் தேர்வுக்கு எதிராக போராடிய அனிதா மரணத்திற்கு நீதி கேட்டு போராடிய மாணவர்கள் மீதும் காவல் துறை தடியடி நடத்தி பள்ளி மாணவர்களிடம் அநாகரீகமாக நடந்து கொண்டது.

கடந்த ஜனவரி 22 முதல் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ வேலை நிறுத்த காலங்களில் பல்லாயிரக் கணக்கில் தங்களது அந்திம கால ஓய்வூதியத்தை பெற போராடிய பெண் ஆசிரியர்களை, அரசு ஊழியர் களை அடுத்த நாள் காலை 3 மணிக்கு மேல் காவல் துறை மறியலில் கைது செய்து விடுவது, ஆபாசமான வார்த்தைகளை பயன்படுத்தி போராட்டத்தை பலவீனப்படுத்த நினைப்பது, போராட்ட பங்கேற்பில் குறைக்க பெண்களை மாலை 6 மணிக்கு மேல் கைது செய்து வைத்திருப்பது போன்ற

அராஜகமான நிகழ்வுகளுக்கு தமிழக அரசும், மத்திய அரசும் துணை போவது போன்ற நிகழ்வுகளை எதிர்த்து பெண் ஊழியர்களும், ஆண் ஊழியர் களுடன் இணைந்த சமதர்ம போராட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டியுள்ளது.

## விசாகா கமிட்டி

1980-க்கு பிறகு பணியிடங்களுக்கும், பொது இடங்களுக்கும் பெண்கள் மிக அதிகமான அளவில் வரத் தொடங்கியபோது பள்ளி, கல்லூரி பெண்கள், பணிக்கு போகும் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் வன்முறைகளால் பாதிக்கப் பட்ட பெண்ணையே குற்றவாளியாக பார்க்கும் மனநிலை சமூகத்தில் பரவலாக இருந்தது. எனவே பல பாலியல் வன்முறைகள் மவுனத்தின் மூலம் தாங்கிக் கொள்ளப் பட்டன. பல நேரங்களில் தங்களது உயிரையும் மாய்த்துக் கொள்ளும் நிலைக்கு பாதிக்கப்பட்ட பெண்கள் தள்ளப் பட்டனர்.

கோடிக்கணக்கில் சமூகத்திற்கும், பணி தளங் களுக்கும் வந்துவிட்ட பெண்களுக்கு வன்முறைகளி லிருந்து எவ்வித குறிப்பான சட்டப் பாதுகாப்பும் இருக்கவில்லை என்பது வருந்தத்தக்கதாக இருந்தது. இந்தியா முழுவதும் நிகழ்ந்த பல வன்முறைகளில் ராஜஸ்தான் மாநிலத்தின் கிராமம் ஒன்றில் பன்வாரி தேவி என்னும் பெண் மீது நிகழ்த்தப்பட்ட கொடூரமான பாலியல் வன்முறை இந்திய நாட்டில் பணி செய்யும் இடங்களில் பாலியல் வன்முறை களுக்கு எதிரான பெண்களின் உரிமைகள் குறித்த சட்டத்தை உருவாக்க ஒரு காரணமாக அமைந்தது.

இதன்பிறகு, "சாக்ஷி" என்ற அமைப்பு பணிபுரியும் இடங்களில் பாலியல் வன்முறைகள் குறித்தும், பாலியல் வன்முறைகளை கையாளு வது குறித்தும் நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல் களை வகுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் கோரியது. அந்த வழக்கு 1997ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் "விசாகா எதிர் ராஜஸ்தான் அரசு" என்னும் வழக்கில் பாலியல் வன்முறை என்பது பற்றிய வரையறை பற்றியும், பாலியல் வன்முறை ஒரு கடுமையான குற்றம் என்பது குறித்தும், பணி விதிகளில் இந்த குற்றம் இணைக்கப்பட்டு திருத்தம் செய்வது குறித்தும் இதற்கான புகார் கமிட்டிகள் 50%க்கும் குறையாமல் பெண்களை கொண்டதாக வும், அக்கமிட்டியின் தலைவராக ஒரு பெண் இருக்க வேண்டும் என்றும், அந்தப் புகார் கமிட்டியில் அந்நிறுவனத்திற்கு சம்பந்தமில்லாத மூன்றாம் நபர் ஒருவர் அக்கமிட்டியில் கட்டாயம் இடம் பெற வேண்டும் என்றும், அந்த நபர் சட்டம் தெரிந்த அல்லது பெண்கள் சம்பந்தப்பட்ட விசயங்களில் அக்கறையுடைய நபர் என்று அறியப்பட்டவராக தரப்பில் இருக்க வேண்டும் என்று தெளிவாக கூறியுள்ளது.

இதன் காரணமாக பல்வேறு பெண்கள் இயக்கங்கள் மற்றும் தேசிய, மாநில பெண்கள் ஆணையங்கள் இது குறித்த நடைமுறைபடுத்தும் பணிகளை செய்து வருகின்றன. இச்சட்டத்தின்படி எல்லா மத்திய, மாநில அரசுத் துறைகள், மத்திய பொதுக் கழகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிலும் புகார் கமிட்டிகள் அமைக்க வேண்டியது அவசியமானது.

தொழிற்சாலைகளை பொறுத்தமட்டிலும் கூட இந்த சட்டம் நடைமுறையில் உள்ளது. ஆனால், எங்கெல்லாம் பெண்களுக்கு பணிப் பாதுகாப்பும், உரிய தொழிலாளர் அமைப்பும் வலுவாக உள்ளதோ, அங்குதான் இதன் உறுதியான நடவடிக்கைகள் சாத்தியமாகின்றன. இந்தியாவின் சட்டங்கள் இதுவரை அங்கீகரிக்காத இந்த வன்முறை அரசியல் சாசனத்தின் படியே அடிப்படை உரிமை மீறல் என்று கூறும் "விசாகா தீர்ப்பு" இந்தியாவில் பணிபுரியும் பெண்களின் மீதான பாலியல் வன்முறைக்கு எதிரான அவர்கள் உரிமைகளை பொதுவெளிகளில் காப்பாற்றும் முதல் மைல் கல் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும்.

இதுபோன்ற பொதுமக்களின் பணியிடங்களில் பணிபுரிகின்ற அரசு ஊழியர்களின் தனியார் துறைகளில்,தொழிற்சாலைகளில் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டும், அரசியல் சாசனத்தை மதிக்கும் பொருட்டும் மத்திய, மாநில அரசுகள் அனைத்து துறைகளில் "விசாகா கமிட்டிகள்" முறைப்படி அமைத்து செயல் பாட்டில் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற பெண்களின் அடிப் படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதையெல்லாம் திரையிட்டு மறைக்கலாம் என்று அரசு தவறாக நினைக்கிறது.

தனக்கு ஆபத்து வரும்போது நெருப்புக் கோழி மண்ணுக்குள் தலையை மறைத்துக் கொண்டு ஆபத்திலிருந்து தப்பி விட்டதாக நினைத்துக் கொள்ளுமாம். ஆனால் ஒரு முழு உடம்பும் வெளியே தெரிவதை மறந்து விடுமாம். தற்போதைய தமிழக அரசின் நிலையும் இப்படித்தான் உள்ளது. ஓட்டு வங்கியாக மட்டும் பெண்கள் இருந்த நிலை தற்போது மாறியுள்ளது. மதிப்பூதியம், தொகுப் பூதியத்தை ரத்து செய்திடவும், ஓய்வூதியம் பெற்றிடவும் என்றும் ஓரணியாய் நிற்போம். மார்ச் 8 மகளிர் தினத்தில் போராட்ட சபதமேற்போம். ஆண்களுடன் பெண்கள் இணைந்த சமதர்ம சமுதாயம் படைப்போம்.

- எஸ்.தமிழ்ச்செல்வி

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

## தேர்தல்கால அறிவிப்புகளாக இல்லாமல்! தீர்வுகாணும் அறிவிப்புகளாக இருக்க வேண்டும்!

தமிழக அரசின் 2019-2020-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ பன்னீர்செல்வம் அவர்கள் 08-02-2019 இன்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்துள்ளார்.

சட்டப் பேரவையில் தாக்கல் செய்துள்ள வரவு-செலவு திட்ட அறிக்கையில் அரசு ஊழியர் மற்றும் ஒய்வூதியர்கள் நலன் சார்ந்து பின்வரும் அறிவிப்புகள் இடம் பெற்றுள்ளது.

பழைய ஒய்வூதியத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கான சாத்திய கூறுகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட, ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப்பணி அலுவலர் திரு. டி.எஸ். ஸ்ரீதர் தலைமையிலான குழுவும், ஊதிய முரண்பாடுகளைக் களைவதற்காக அமைக்கப்பட்ட திரு. எம்.ஏ. சித்திக், இ.ஆ.ப. அர்களின் தலைமையிலான குழுவும் தங்களின் அறிக்கைகளை சமர்ப்பித்துள்ள இவ்வறிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்றும்

அரசின் வருவாய் கணக்கில் செலவுகள் தலைப்பின் கீழ் 2019-2020-ம் ஆண்டிற்கான வரவு - செலவு திட்ட மதிப்பீடுகளில் சம்பள செலவினத்திறகான ஒதுக்கீடு 55,399.74 கோடி ரூபாயும், ஓய்வூதியம் மற்றும் இதர ஓய்வுக்கால பயன்கள் குறித்த செலவினத்திற்கான ஒதுக்கீடு 29,627.11 கோடி ரூபாயும் இந்த இரண்டு கூறுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள், 2019-2020 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய் செலவினத்தில் 40.10 சதவீதமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்கள் ஓய்வூதியம் மற்றும் மக்கள் நலன் சார்ந்த வேலையற்ற வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பை உத்திரவாதப்படுத்திடவும், மாணவர்களின் கல்வி மேம்பாடு என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 22-01-2019 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவந்த நிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் சம்பள உயர்விற்காக போராடுகிறவர்கள் என்றும், மக்களுக்கு எதிராகவும், மாணவர் நலனுக்கு எதிராகவும் போராடுகின்றனர் என்ற தவறான செய்தியை தெரிவித்து கடந்த 26-01-2019 அன்று மாண்புமிகு மீன்வளம் மற்றும் பணியாளர் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் அவர்கள் அரசு ஊழியர் ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினம் அரசின் மொத்த வரி வருவாயில் 71 சதவீதம் என்று தவறான தகவலை அரசின் செய்திக்குறிப்பின் வாயிலாக தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிட தக்கதாகும்.

இதனைத் தொடர்ந்து கடந்த 29-01-2019 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்றும், அம்மாவின் அரசு மக்களின் நலனைக் காக்கும் அதே வேளையில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை என்றுமே புறந்தள்ளியதில்லை எனவும்,

பிற மாநிலங்களோடு போட்டி போட்டு தொழில் முதலீடுகளை நாம் பெற்றால்தான், நமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க முடியும். இவற்றை எல்லாம் செய்ய வேண்டுமென்றால், நாம் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வோடு கடும் பணியாற்ற வேண்டும். எனவே எனது அன்பான வேண்டுகோளைக் கருதி நாளையே அனைவரும் பணிக்கு திரும்ப வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

மேற்கண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை வரவேற்றும், எதிர்காலத்தில் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் 30-01-2019 உடன் வேலை

நிறுத்தத்தை தற்காலிகமாக முடித்துக்கொண்டு பணிக்கு திரும்பியுள்ள நிலையில், 13.02.2016 அன்றயை பட்ஜெட் வரவு-செலவு திட்ட உரையில் சென்ற ஊதிய மாற்றறத்தின்போது நிகழ்ந்த தாமதங்களையும், முரண்பாடுகளையும் மாண்புமிகு முதல்வரும், நிதியமைச்சரும் ஒப்புக்கொண்டு இனி அமைக்கப்படும் ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழுவின் பரிந்துரைகள் காலதாமதப்படுத்தாமல் வழங்கப்படவும், அரசாணைகள் முரண்பாடுகள் இல்லாமல் வெளியிடப்படவும். தவணைகளில் நிலுவைத்தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பேரவையில் பட்ஜெட் வரவு-செலவு திட்ட உரையிலும்(03-02-2016) தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழான அறிக்கையிலும் 09-02-2016 தெரிவித்தனர். ஆனால் இன்றும் நீடித்து வரும் நிலையில்

மீண்டும் இன்று சட்டப்பேரவையில் மீண்டும் பழைய ஓய்வூதியத்திற்காக அமைக்கப்பட்ட வல்லுநர் குழு மற்றும் ஊதிய முரண்பாடுகளை களைவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையும் அரசின் பரிசீலனையில் உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது மக்கள் நலன் மற்றும் மாணவர்கள் நலனில் அக்கறையுடன் செயல்பட்டு வரும் ஜாக்டோ-ஜியோ அமைப்பு வரவேற்பதுடன் இந்த பட்ஜெட் அறிக்கை தேர்தல்கால அறிவிப்புகளாக இல்லாமல் தீர்வுகாணும் அறிவிப்புகளாக இருக்க வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறோம்.

- மாநில ஒருங்கிணைப்பாளர்கள்

ஜாக்டோ-ஜியோவிற்காக



*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தருமபுரி மாவட்ட செயலாளர் ஏ.சேகர் மற்றும் அவரது துணைவியார் தங்களது 26வது திருமண நாளையொட்டி (21.2.2019) ஏழை எளிய மாணவர்களுக்காக சிஐடியு நடத்தும் அயனாவரம் பள்ளிக்கு நன்கொடையாக ரூ.5,000/- வழங்கியுள்ளனர். இருவரும் நீண்ட ஆயுளுடனும், வளமுடனும் வாழ்ந்திட சிஐடியு தர்மபுரி மாவட்ட குழு வாழ்த்துகிறது.*



*23.02.2019 அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க மத்திய செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 25.02.19 அன்று மாலை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பெருந்திரள் முறையீட்டு போராட்டம் மாவட்டத் தலைவர் எல்.பிரேம் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் து.இளவரசன் விளக்கவுரை யாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் சிறப்புரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் சி.பிச்சைப்பிள்ளை நன்றி கூறினார்.*



*தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கம் சார்பில் ஜாக்டோ-ஜியோ சார்பில் 22.01.2019 முதல் நடந்த வேலை நிறுத்த போராட்டத்தை ஒட்டி அனேகமாக மாநிலத்தில் ஒரே பெண் ஊழியர் ஜி.பழனியம்மாள் கைது செய்யப்பட்டு தற்காலிக பணி நீக்க காலத்தில் இருந்து மீண்டும் 21.02.2019 அன்று அச்சங்கத்தின் மாநில தலைவர் வி.சௌந்தரராஜன் அவர்கள் முன்னிலையில் பணியில் சேர்ந்த போது தருமபுரியில் நடைபெற்ற பாராட்டு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.*

# ஜாக்டோ – ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

பெறுநர்
மாண்புமிகு **உயர்கல்வித்துறை** அமைச்சர்
தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வணக்கம்.

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி பல்வேறு கட்ட ஜனநாயகப் போராட்டங்களை நடத்தி தமிழக அரசு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகாண முன்வராத நிலையில், மறைந்த முன்னாள் முதல்வர் அம்மா அவர்களின் வாக்குறுதியான அனைவருக்கும் பழைய ஒய்வூதியம் என்பதனை அடைவதற்காக, கடந்த 22.01.2019 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

இந்நிலையில் கடந்த 29.01.2019 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஜாக்டோ ஜியோ அமைப்பினருக்கு விடுத்த அன்பான வேண்டுகோளை ஏற்று, 30.01.2019 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தினை கைவிட்டு ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் அனைவரும் பணிக்குத் திரும்பினோம்.

போராட்டத்தில் ஈடுபட்டு தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் மீண்டும் மீளப் பணியமர்த்தப்பட்டு விட்டனர். தமிழக அரசுக் கல்லூரிகளில் போராட்டத்தில் ஈடுபட்ட 27 கல்லூரிப் பேராசிரியர்கள் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டனர். கடந்த 20.02.2019 அன்று அனைவரின் தற்காலிகப் பணிநீக்கமும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களால் மீளப் பெறப்பட்டது. ஆனால் அதில் 17 பேராசிரியர்களுக்கு வெகு தூரஙகளுக்கு மாவட்டம் விட்டு மாவட்டம் பணி மாறுதல் வழஙகப்பட்டுள்ளது என்பதனை தஙகளின் பணிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

கடந்த 29.01.2019 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஜாக்டோ ஜியோ அமைப்பினருக்கு விடுத்த அன்பான வேண்டுகோளை ஏற்று, 30.01.2019 முதல் அனைவரும் பணிக்குத் திரும்பியுள்ள நிலையில், தற்போது 17 கல்லூரிப் பேராசிரியர்களுக்கு பணி மாறுதல் வழஙகப்பட்டுள்ளது மிகவும் வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது.

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள், மாணவர் நலன் கருதி பணி மாறுதல் செய்யப்பட்டுள்ள 17 கல்லூரிப் பேராசிரியர்களையும் அவர்கள் ஏற்கனவே பணிபுரிந்த கல்லூரிகளில் பணியமர்த்துவதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தஙகள் நம்பிக்கையுள்ள,
ஒருஙகிணைப்பாளர்கள்

# ஜாக்டோ - ஜியோ (JACTTO-GEO)

## (Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

நாள்.4.2.2019

பெறுநர்
**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை 600 009.

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு, வணக்கம்.**

தமிழ் நாட்டில் அரசுப் பள்ளிகளில், அரசுத் துறைகளில் பணிபுரியம் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்கள் ஆகிய நாங்கள் எங்களது நியாயமான உரிமைகளுக்காக இயக்கங்களை நடத்தி வருகிறோம். ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்களின் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்றிட, பல்வேறு கட்ட ஜனநாயக நடவடிக்கைகளை மேற்கொண்டும் தீர்வு எட்டப்படாத சூழ்நிலையில்தான், கடந்த 22,01,2019 முதல் தமிழகத்திலுள்ள ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்களின் கூட்டமைப்பான ஜாக்டோ ஜியோ வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டது என்பதை தங்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்,

இந்தியாவில் பிற மாநிலங்களில் அரசுத் துறைகளில், அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பணியாளர்கள் துய்க்கின்ற உரிமைகளைத்தான் நாங்கள் தமிழக அரசிடம் கோருகின்றோம். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் தமிழகத்தில் உள்ள அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் என அறிவித்துவிட்டு, அடிப்படை சம்பளம் தவிர்த்து மற்ற அம்சங்களில் மிகுந்த பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இடைநிலை ஆசிரியர் போன்ற சில பிரிவினருக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் இன்றுவரை நிர்ணயிக்கப்படவில்லை.

இதைப்போலவே ஊதிய மாற்றங்களில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை சரிசெய்ய வேண்டுமென்ற கோரிக்கையை சென்ற ஊதிய மாற்றத்திலிருந்தே (2006) தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணிபுரிபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என அரசு அறிவித்தது பல ஆண்டுகளாக கிடப்பில் உள்ளது. அதை பரிசீலித்து நல்லதொரு முடிவு எடுக்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்டு வருகிறோம். புதிய ஓய்வூதியத் திட்டம் திரும்பப் பெறப்படும் என தங்கள் கட்சியின் 2011 தேர்தல் அறிக்கையிலேயே உத்தரவாதம் வழங்கப்பட்டு ஆட்சிக்கு வந்தபின் நான்கு ஆண்டுகளாக மௌனம் காத்ததும், பின்னர் வல்லுநர் குழு அமைத்து மூன்று ஆண்டுகளாக அதன் காலம் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வந்ததுமான அம்சங்களால்தான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்தினை ஈர்த்திடும் நோக்கமே எங்களை போராட்டக் களத்திற்கு இழுத்து வந்தது என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கனிவுடன் தெரிவித்து கொள்கிறோம்.

ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்களின் தீர்க்கப்பட வேண்டிய கோரிக்கைகள் நூற்றுக்கணக்கில் இருந்தபோதிலும், அடிப்படையில் மிக மிக முக்கியமான சில அம்சங்களை மட்டும் தமிழக அரசிடம் இருந்து இப்போதைக்கு வலியுறுத்தி பெறலாம் என்று நாங்கள் எங்கள் கோரிக்கைகளை ஒன்பதாக சுருக்கி தங்களிடம் ஏற்கனவே வழங்கி இருந்தோம்.

எங்களது ஒன்பது கோரிக்கைகளில் உள்ள நியாயமான உரிமைகளை மக்களின் நலன் காக்கும் அரசு மறுக்கக்கூடாது என்று கேட்டுக் கொண்டோம். இந்தியாவில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. சமூகநீதி, சமத்துவம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், பெண்களுக்கான உரிமை போன்ற பல தளங்களில் முன்னோடியான மாநிலமாகும்.

இந்நிலையில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்களின் ஒன்பது அம்சக் கோரிக்கைகளுக்காக கடந்த 22.01.2019 முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும்

சங்கங்கள் ஈடுபட்டு, மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்தினை ஈர்த்து கோரிக்கைகளை நிறைவேற்றிட விழைந்தோம்.

அதன் அடிப்படையில், எட்டு நாட்களாக நடைபெற்று வந்த எங்களது வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எமது அமைப்பினை அழைத்துப் பேசினாலே எங்களது கோரிக்கைகள் நிறைவேறும் என்று உளமாற நம்பி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எங்களை அழைத்துப் பேச வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்தோம்,

இந்நிலையில், **29.01.2019 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,**

> இந்த அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, ஏழை எளிய மக்களின் நலன் காக்கும் அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியப் பெருமக்களின் நியாயமான கோரிக்கைகளை என்றும் மறுத்ததில்லை, மாண்புமிகு அம்மா அவர்கள், அரசு ஊழியர்கள் கேட்காமல் கூட பல கோரிக்கைகளை ஊழியர்களின் நலன் கருதி நிறைவேற்றியுள்ளார்கள், அவர்களின் வழியில் வந்த அம்மாவின் அரசும், மக்களின் நலனைக் காக்கும் அதே வேளையில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை என்றுமே புறந்தள்ளியதில்லை

என்றும்

> மாநில அரசு மக்களின் நலனுக்காக செயல்பட வேண்டும். இதில் என்னோடு அரசு ஊழியர்களாகிய உங்களுக்கும் முழு பங்கு உண்டு. நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்தால்தான், ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி, இலட்சக்கணக்கான வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி, தமிழக மக்களின் வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தி, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முடியும்

என்றும்

> பிற மாநிலங்களோடு போட்டிப் போட்டு தொழில் முதலீடுகளை நாம் பெற்றால்தான், நமது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க முடியும். இவற்றை எல்லாம் செய்ய வேண்டும் என்றால், நாம் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வோடு கடும் பணியாற்ற வேண்டும். இத்தகைய பொறுப்புகள் பெருஞ்சுமையாக இருக்கும்பொழுது, உரிமைளை மட்டுமே பேசிக் கொண்டிருப்பது, நாம் மேற்கொண்டிருக்கும் மக்கள் பணிகளுக்கு பொருத்தமாக அமையாது

என்றும்

> எனவே அரசு ஊழியர்களும் ஆசிரியப் பெருமக்களும் தங்களுடைய போராட்டங்களை உடனடியாகக் கைவிட்டு, மக்கள் பணிக்குத் திரும்ப வேண்டும். மாநிலம் சந்தித்து வரும் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு, மக்களின் நலன் பேணும் திட்டங்களையும் வளர்ச்சித் திட்டங்களையும் ஈடுபாட்டோடும் அர்ப்பணிப்பு உணர்வோடும் செயல்படுத்த வேண்டும்

என்றும்

> எனவே, அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நான் அன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், போராட்டத்தை உடனடியாக கை விடுங்கள். பணிக்குத் திரும்புங்கள். மக்கள் பணியை நாம் அனைவரும் ஒன்றுபட்டு தொய்வின்றி தொடர்ந்து மேற்கொள்வோம்

என்றும்

> **இதை எனது அன்பான வேண்டுகோளாகக் கருதி, நாளையே அனைவரும் பணிக்குத் திரும்ப கேட்டுக் கொள்கிறேன்**

என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

**மேற்கண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு வரவேற்றும் எதிர்காலத்தில் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் வேண்டுகோளின்படி மக்கள் நலன் பேணவும் மாணவர் நலன் கருதியும் வேலைநிறுத்தப் போராட்டத்தினை 30.01.2019 உடன் முடித்துக் கொண்டு, அன்றுமுதல் உடனடியாக மக்கள் பணிக்குத் திரும்புவது என முடிவெடுத்தோம்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பணியேற்கச் சென்ற ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பணியாளர்கள் பின்வரும் பிரச்சனைகளை அதிகாரிகளின் நடவடிக்கையினால் எதிர்கொள்ள வேண்டிய நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளைக் கூட நாங்கள்

நிறைவேற்ற இயலாத சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதனை தங்களின் கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

1) பணியேற்கச் சென்ற ஆசிரியர்களுக்கு அவர்கள் 21.01.2019 அன்று வரை பணியாற்றிய பள்ளியில் சேர அனுமதிக்காமல் வேறு பள்ளிக்கு மாறுதல் என்று சொல்லி பணியில் சேர அனுமதிக்காத நிலை

2) புனையப்பட்ட வழக்கு நிலுவையில் இருப்பதால் பணியில் சேர மறுக்கும் நிலை

3) தற்காலிகப் பணி நீக்கம் என்று சொல்லி பணியில் சேர அனுமதிக்காத போக்கு

4) ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதாகக் கூறி பணியில் சேர அனுமதிக்காமல் மறுக்கும் நிலை

5) பணியில் சேரும் ஆசிரியர்களுக்கு மாறுதல் பணியிட உத்தரவு வழங்குவதை முற்றிலுமாக கைவிட வேண்டும். மேலும் மாறுதல் பணியிட உத்தரவு வழங்கப்பட்டிருந்தால் அதனையும் முற்றிலுமாக இரத்து செய்திட வேண்டும்.

பொதுமக்கள், மாணவர் நலன் கருதியும் அரசுப் பணிகள் முடங்குவதால் ஏற்படும் அரசுக்கு ஏற்படும் சிரமங்களைக் கருத்தில்கொண்டும் மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்பான வேண்டுகோளை ஏற்றும் வேலைநிறுத்தத்தை 30.01.2019 அன்றே கைவிட்டு பணியேற்க சென்ற நிலையில்,

மாண்புமிகு தமிழக முதல்வரின் அறிக்கையின் நோக்கத்தினை முழுமையாக சிதைக்கும் நோக்கிலும் எந்த நோக்கத்திற்காக வேலைநிறுத்தம் விலக்கிக்கொள்ளப்பட்டதோ அந்த நோக்கத்தினையே சீர்குலைக்கும் வகையிலும் ஆங்காங்கே உள்ள அலுவலர்கள் மேற்கண்ட காரணங்கள் உட்பட பல்வேறு அடிப்படையற்ற காரணங்களைக் கூறி மாணவர் நலன் மற்றும் பொதுமக்களின் நலனில் அக்கறையற்று வேலைநிறுத்த காலம் நீடிப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். மேற்படி காரணங்கள் யாவும் பணியில் சேர தடையில்லை என்பதால் உரிய அறிவுரைகளை உடன் வழங்கி அனைவரையும் பணியில் சேர்ந்திட வழிவகை செய்யுமாறும்

நியாயமான கோரிக்கைகளுக்காகத்தான் போராடியுள்ளோம் என்ற அடிப்படை நியாயங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மறுக்காமல், தமிழகத்தின் நிதிநிலையினை குறிப்பிட்டு தற்போது இயலாத நிலையினை தெரிவித்து அம்மாவின் அரசு அரசு ஊழியர் நலன் காக்கும் அரசு என்று கூறியுள்ள நிலையில், போராட்டக் காலத்தில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்-பணியாளர்கள் மீது புனையப்பட்டுள்ள வழக்குகள், தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் தற்காலிக பணிநீக்கங்களை திரும்பப் பெற்று, ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்-பணியாளர்களுக்கும் அரசுக்கும் உள்ள உறவினை சுமூகமாக்கி பணித்திறன் மேம்பட உதவிடுமாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

தங்கள் நம்பிக்கையுள்ள,

ஒருங்கிணைப்பாளர்கள்

மு. சுப்பிரமணியன்
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

ஆ. ஆறுமுகம்
தமிழக தமிழாசிரியர் கழகம்

அ. மாயவன்
தமிழ்நாடு உயர்நிலை-மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்

உ.மா. செல்வராஜ் 4/2/19
தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கம்

க. மீனாட்சி சுந்தரம்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம்

கி. மகேந்திரன்
தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்-கழகம்

செ. முத்துசாமி
தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி

ந. ரெங்கராஜன்
தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

இரா. தாஸ்
தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

அ. வின்சென்ட் பால்ராஜ்
தமிழக ஆசிரியர் கூட்டணி

மு. அன்பரசு
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

வே. மணிவாசகம்
தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி முதுகலை பட்டதாரி ஆசிரியர் கழகம்

கே.பி.ஓ. சுரேஷ்
தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகம்

4.2.2019
சி. சேகர்
தமிழ்நாடு தொடக்க நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் சங்கம்
(ஜாக்டோ-ஜியோ நிதிக் காப்பாளர்)

**டாக்டர் ஆர். தாமோதரன்**
தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

**கு. வெங்கடேசன்**
தலைமைச் செயலகம்

**ச. மோசஸ்**
தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி
(ஜாக்டோ ஜியோ நிதிக் காப்பாளர்)

**கு. தியாகராஜன்**
தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம்
(ஜாக்டோ ஜியோ செய்தித் தொடர்பாளர்)

**எஸ். சங்கரப் பெருமாள்**
தமிழ்நாடு உடற்கல்வி ஆசிரியர் இயக்குநர் சங்கம்,

**பொன். செல்வராஜ்**
தமிழ்நாடு பதவி உயர்வு பெற்ற முதுநிலை பட்டதாரி ஆசிரியர் ~~கழகம்~~ சங்கம்.

நகல்

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்,**
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

**மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,**
பள்ளிக்கல்வித் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

**மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,**
மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

**மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,**
உயர்கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

**தலைமைச் செயலாளர்**,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

**அரசு முதன்மைச் செயலாளர்**,
பள்ளிக்கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

**அரசு முதன்மைச் செயலாளர்**,
உயர்கல்வித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

**அரசு செயலாளர்**,
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

## வாசகர் கடிதம்

*2019 பிப்ரவரி மாத இதழ் படித்தேன். இதில் வெளிவந்த கட்டுரைகள், பொதுச் செயலாளர் மேசை, தலையங்கம் என அனைத்துமே சிறப்பாக உள்ளது. பல அடக்குமுறைகளை அடக்கிய ஒடுக்கியவர்கள் நாம். இது சரித்திரம் சொல்லும். வெற்றி நமதே.*

- ***ரா.தட்சிணாமூர்த்தி,***
**கடலூர்**

*பிப்ரவரி 2019 மாத இதழின் அட்டைப் படங்கள் ஜாக்டோ ஜியோ வின் போராட்டக்களத்தை மீண்டும் நினைக்க வைத்தது. வாய் கிழிய பொய் பேசுபவர்களின் கடைசி நேரம் இது. நீதி மன்றங்கள் நடுநிலை வகிக்க வேண்டும் என ஓய்வு பெற்ற நீதியரசர் து. அரிபரந்தாமன் போன்ற நல்லவர்கள் எதை சொன்னாலும் இந்த மத்திய மாநில அரசுகள் கேட்காது. "நமது வெற்றி எட்டும் தூரம்" தோழர் எஸ் தமிழ்ச்செல்வி அவர்களின் கவிதை நம்பிக்கை ஊட்டியது. மனம் திறந்த மடல் போராட்டத்தில் தொடர்ந்து இயங்கி கைது செய்யப்பட்டு இருக்கும்போதும் மாணவர்களை பற்றிய சிந்தனையோடு இருந்தார்கள் என்பதும் மிகவும் உருக்கமாக இருந்தது. நல்ல புத்தகங்களை தேடிப்படிப்பவர்களுக்கு நிச்சயம் இதயம் இருக்கும். அனைத்தும் அருமை.*

- ***சி. பாலசுப்ரமணியன்,***
**நாகை**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்**
**Tamilnadu Government Employees' Association**
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


# தேர்தலை காரணம் காட்டி அரசு ஊழியர்களை மாவட்ட மாறுதல்கள் செய்வதை அரசும் தேர்தல் ஆணையமும் உடனடியாக திரும்பப் பெற வேண்டும்!

தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு பல அரசுத்துறைகளில் உள்ள அதிகாரிகள் இடமாறுதல் செய்யயப்பட்டுள்ளனர். இந்த நடைமுறை தேர்தல்காலங்களில் உள்ள பொதுவான நடைமுறைதான் என்ற போதிலும் தேர்தல் பணிகளில் நேரடியாக தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் மட்டும் இடமாறுதல் செய்யப்படுவதும் அதுவும் அவர்கள் பணிபுரியும் மாவட்டத்திற்குள்ளேயே வேறு இடங்களில் இடமாறுதல் செய்யப்படுவதும் தேர்தல் முடிந்ததும் பழைய இடத்திற்கே அவர்கள் மீளப் பணியமர்த்தப்படுவதும் இதுநாள்வரை கடைபிடிக்கப்பட்டுவரும் நெறிமுறைகளாகும்.

ஆனால் இந்த நடைமுறை இப்போது மீறப்பட்டு தேர்தலுக்கு சம்பந்தமுள்ள அதிகாரிகள் மட்டுமல்ல அதில் சம்பந்தப்படாத அதிகாரிகளும் அலுவலர்களும் இடமாறுதல் செய்யப்பட்டிருப்பதும், அதுவும் அவர்கள் சொந்த மாவட்டத்திலேயே வேறு சட்டமன்ற அல்லது பாராளுமன்ற தொகுதிக்கு மாற்றினால் தேர்தலை சீர்குலைத்துவிடுவார்கள் என்பதுபோல வேறு மாவட்டங்களுக்கு மாற்றி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களும் கூடுதல் தலைமை செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையரவர்களும் பிற அதிகாரிகளும் உத்தரவிட்டிருக்கும் நடவடிக்கைகள் அரசு ஊழியர்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2009 மற்றும் 2014 நாடாளுமன்றத் தேர்தல்களில் மற்றும் 2016 சட்டமன்றத் தேர்தல் பணிகளில் நேரடியாக தொடர்புள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் மாவட்டத்திற்கு உள்ளாகவே வேறு சட்டமன்றதொகுதிக்கு பணி மாறுதல் செய்யப்பட்டனர் என்பதும் இதுவரை நடந்த தேர்தல்களில் எந்தவித புகாருக்கும் இடமளிக்காமல் தேர்தல் ஆணையத்தின்அறிவுரைப்படி அரசு அதிகாரிகள் தேர்தலை சிறப்பாக நடத்திக் கொடுத்துள்ளனர் என்பதும் நாடறிந்த வரலாறு. ஆனால் எந்தவித குறிப்பிட்ட காரணமும் கூறாமல் இதுவரையில் நடைமுறையில் இருந்த செயல்பாட்டை மாற்றி தேர்தலில் நேரடித் தொடர்பு உள்ள அதிகாரிகள், இல்லாத அதிகாரிகள் என இதுவரை தமிழக அரசு 1500க்கும் மேற்பட்டோரை மாவட்ட மாறுதல் செய்துள்ளது. அதிலும் தேர்தல் பணிகளில் சற்றும் தொடர்பு இல்லாத பெண்கள் 150 பேரை வேறு மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்துள்ள நிகழ்வானது அரசு ஊழியர்களை கொதிப்படைய வைத்துள்ளது.

இந்த மாவட்ட அளவிலான மாறுதல் என்பது தேர்தல் முடியும் வரைதான் என்று எதுவும் குறிப்பாக தெரிவிக்கப்படாத நிலையில், மாவட்ட மாறுதல் என்பது அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசு அதிகாரிகளின் பணிமூப்பு மற்றும் பதவி உயர்வுகளை பெரிதாக பாதிக்கும். இது பணி விதிகளுக்கு முரணாக அமையும் என்பதை அரசு கருத்தில் கொள்ளாமலேயே மாறுதல் செய்துள்ளது அவசரக் கோலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகவே அரசு ஊழியர்கள் மத்தியில் கருத்து எழுந்துள்ளது.

மாவட்ட அளவில் வேறு இடங்களில் தேர்தலுக்காக இடமாறுதல் செய்வதை அரசு ஊழியர்கள் எதிர்க்கவில்லை. ஆனால் இதை அரசும் உயரதிகாரிகளும் செயல்படுத்தும் முன்னர் ஏற்கெனவே கடைபிடிக்கப்பட்டு வரும் செயல்முறைகளை கருத்தில் கொண்டு கடைபிடிக்க வேண்டும். இதற்கு முந்தைய தேர்தல்களில் தேர்தல் பணியில் அரசுக்கு எதிராகவோ அல்லது குறிப்பிட்ட அரசியல்

கட்சிக்கு ஆதரவாகவோ செயல்பட்டதற்கான அத்தாட்சியோ ஆதாரமோ அற்ற நிலையில் சகட்டு மேனிக்கு தேர்தல் வேலைகளில் சம்பந்தமே இல்லாத பெண் ஊழியர்களையும் மற்ற அதிகாரிகளையும் மாவட்ட மாறுதல் செய்திருப்பது அரசு ஊழியர்கள் மீது இந்த அரசு வைத்திருக்கும் அவநம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவே பார்க்க வேண்டியுள்ளது.

மாவட்ட மாறுதல் பெற்றுள்ள அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் குறிப்பாக பெண் அதிகாரிகள் தங்கள் பிள்ளைகளின் தேர்வுக்காக உடனிருந்த கண்காணிக்க முடியாத நிலையும் குடும்பத்தினரை கவனிக்க முடியாக சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது என்பதை அரசு கணக்கில்கொள்ள வேண்டும். தேர்தல் எவ்வளவுக்கெவ்வளவு முக்கியமோ அதே போல பிள்ளைகளின் இறுதியாண்டுத் தேர்வுகளும் முக்கியமானதாகும்.

எனவே தேர்தல் ஆணையமும், அரசும் இந்த மாவட்ட பணிமாற்ற விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு எப்போதும் கடைபிடிக்கும் நடைமுறைகளையே, அதாவது உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் பணியிடங்களில் உள்ள அதிகாரிகளை மட்டும் மாவட்டத்திற்கு உள்ளேயே உள்ள வேறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு மாற்றி இடமாறுதல் செய்ய அறிவுறுத்தக் கேட்டுக் கொள்கிறோம். எந்தவித முகாந்திரமும் இல்லாமல் அரசு ஊழியர்களை வேறு மாவட்டங்களுக்கு தேர்தலை காரணம் காட்டி உரிய நடைமுறைகளை பின்பற்றாமல் மாற்றுகின்ற செயலானது முன்னெப்போதும் கண்டிராத நடவடிக்கை என்பதுடன் ஊழியர்களின் பிள்ளைகள், பள்ளி இறுதியாண்டுத் தேர்வுககளை சரியாக எழுத முடியாத மன உளைச்சலை ஏற்படுத்தும் என்பதையும் அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்த நடவடிக்கைகளில் உடனடியாக அரசு தலையிட்டு மாவட்டஅளவிலான இடமாறுதல் உத்தரவுகளை திரும்பப் பெற வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அரசு ஊழியர்கள் இந்த நடவடிக்கைகளை பழிவாங்கும் நடவடிக்கைகளாகவே பார்க்கத் தலைப்படுவார்கள் என்பதையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சேர்க்க விரும்புகிறோம்.

இந்த மாவட்ட மாறுதல்கள் குறித்து ஏற்கெனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் தேர்தல் ஆணையத்திடமும் அரசாங்கத்திடமும் நேரடியாகவும், கோரிக்கை மனுக்கள் வாயிலாகவும் தெரிவித்து இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் நாங்கள் மீண்டும் அரசு மற்றும் தேர்தல் ஆணையத்தின் கவனத்தை போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் வாயிலாக ஈர்த்து அழுத்தம் தர வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

தேர்தல் நடைமுறைகளை காரணம் காட்டி அரசு ஊழியர்களை மாவட்ட மாறுதல் செய்வதை கைவிட வேண்டும். எப்போதும் கடைபிடிக்கப்படும் தேர்தல் நடைமுறைகளையே தேர்தல் ஆணையம் கடைபிடிக்க வேண்டும் மற்றும் வேறு மாவட்டங்களுக்கு இட மாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகளை அவர்கள் ஏற்கனவே பணிசெய்த மாவட்டத்திற்குள்ளாக உள்ள வேறு சட்டமன்றத் தொகுதிக்கு மாறுதல் செய்ய வேண்டும் போன்றவை குறித்து வலியுறுத்துவது எனவும் அரசாங்கமும் தேர்தல் ஆணையமும் அரசு உழியர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை காலதாமதம் செய்யாமல் மேற்கொள்ள வேண்டும்.

அன்றின் தேர்தல் அமைதியாகவும் முறையாகவும் நேர்மையாகவும் நடத்தப்படுவதில் முடக்கம் நேரவாய்ப்பிருப்பதை சுட்டிக்காட்ட விழைவதோடு தேர்தல் பணிகளில் ஏற்படும் பாதகங்களுக்கு எமது ஊழியர்கள் பொறுப்பாக மாட்டார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறாம். ◣

## சிறை சென்ற தோழர்களுக்கு பாராட்டு விழா

*தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை திறன்மிகு உதவியாளர் சங்கத்தின் சார்பாக ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் பங்கேற்ற சாலை ஆய்வாளர்களுக்கு பாராட்டு விழா திருச்சியில் மாநிலச் செயலாளர் சி.குருசாமி தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் மு.மாரிமுத்து சிறப்புரையாற்றினார். மாநில தணிக்கையாளர் ஏ.சாலமன் வரவேற்றார். மாநில, மண்டல நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் பெரியசாமி மற்றும் திருச்சி மாவட்ட செயலாளர் வளன் அரசு ஆகியோர் பாராட்டி பேசினர். இதில் ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் மு.சுப்பிரமணியன் பங்கேற்று நினைவு பரிசை வழங்கினார். மாநில மகளிர் துணைக் குழு உறுப்பினர் மு.பரிதா பேகம் நன்றி கூறினார்.* ◣

# மாட்டரசியலில் பலியான நேர்மை

உத்திரபிரதேச மாநிலத்தில் மதவெறி கும்பல்களின் சூழ்ச்சிகளுக்கு எதிராக நேர்மையான நடவடிக்கை எடுத்து வந்த காவல்துறை அதிகாரி சுபோத்குமார் சிங்கை ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தள் கும்பல் டிசம்பர் 3 அன்று திட்டமிட்டு படுகொலை செய்தது உலகறிந்த ஒன்றாகிவிட்டது. ஆனால் இதற்குப் பின்னாலுள்ள அரசியல் அனைவரும் அறிய வேண்டிய அவசியம் உள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் தாத்ரியை அடுத்துள்ள பிசோதா கிராமத்தில், கடந்த செப்டம்பர் மாதம் 28-ம் தேதி இரவு பசுவை பலி கொடுத்து அதன் இறைச்சியை முகமது இக்லாக் குடும்பத்தினர் சாப்பிட்டதாகக் கூறி ஆர்.எஸ்.எஸ் மற்றும் பஜ்ரங்தள் கும்பல் முதலில் வதந்தியைப் பரப்பியது. அதனைத் தொடர்ந்து 200 பேர் கொண்ட கும்பல் இக்லாக் வீட்டுக்குள் புகுந்து அவரை அடித்தே கொன்றது. இந்த வழக்கை விசாரித்து வந்த காவல்துறை அதிகாரி சுபோத் குமார் சிங் அங்கிருந்த இறைச்சியைப் பரிசோதனைக்கு அனுப்பினார்.

அதில் இக்லாக் வைத்திருந்தது ஆட்டு கறி என்றும், பஜ்ரங்தள் கும்பல் திட்டமிட்டு ஒரு ராணுவவீரரின் தந்தை முகமதுஇக்லாக்கை படுகொலை செய்திருப்பதும் தெரிய வந்தது. இந்த விவகாரம் வெளிஉலகிற்குத் தெரிய வந்தவுடன் சுபோத் குமார் சிங்கை யோகி அதித்யாநாத் அரசு இடமாற்றம் செய்தது. அதன்படி புல்சந்தார் பகுதியில் சுபோத்குமார் சிங் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில் இவரை எப்படியாவது காலி செய்து விட வேண்டும் என்று திட்டமிட்ட கும்பல் ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்கிறது. இந்தக் கலவரமே இந்துத்துவா அமைப்புகளால் திட்டமிட்டு நடத்தப்பட்டதுதான் என்பதும் தற்போது தெரிய வந்திருக்கிறது. புல்சந்தார் வட்டாட்சியர் ராஜ்குமார் பாஸ்கர் இதுகுறித்து திடுக்கிடும் விவரங்களைத் தெரிவித்துள்ளார்.

"பசுவைக் கொன்று அதன் தோலை மரத்தில் தொங்க விட்டிருக்கின்றனர். இது மாட்டுக்கறியைச் சாப்பிட வேண்டும் என்று நினைப்பவர்கள் செய்யும் செயல் அல்ல. காரணம் அப்படி சாப்பிடுபவர்கள் ஒருசிறு பாகத்தைக் கூட விடாமல் மறைத்து விடுவார்கள். ஆனால் இங்கு எல்லோரும் பார்க்கும் படியாக தொங்கவிடப்பட்டிருக்கிறது.

மேலும் இதுகுறித்து முதல் தகவல் தெரிந்த ஐந்தே நிமிடத்தில் ஆர்எஸ்எஸ், ஹிந்து யுவா வாஹினி, சிவசேனா, பஜ்ரங்தள் உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் 'பசு பாதுகாவலர்கள்' என்ற பெயரில் உடனே வந்துள்ளனர். அதுவும் ஏற்கனவே டிராக்டர் உள்ளிட்ட வாகனங்களில் தகவல் தெரிவிப்பதற்கு முன்பே எப்படி தயார் நிலையில் இருந்திருக்க முடியும். தகவல் தெரிந்த ஐந்தே நிமிடங்களில் பல்வேறு பகுதிகளில் உடனே எப்படி 400-க்கும் மேற்பட்டோர் கூட முடியும். அதுவும் வந்து சேர்ந்தவுடன் உடனே எப்படி கலவரத்தில் ஈடுபட முடியும்? இது முன்திட்டமிட்ட படுகொலையே ஆகும்" என வருவாய் வட்டாட்சியர் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இவரின் கூற்றை உறுதிப்படுத்தும் காவல்துறை அதிகாரிகள், அதற்கான காரணத்தையும் முன் வைக்கின்றனர். "முதலில் மறியல் செய்வது போல் கூடியவர்கள், காவல்துறையினர் சென்று பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் போது திடீரென அனைவரும் தாக்குதல் தொடுத்தனர். அதில் குறிப்பாக இக்லாக் வழக்கை விசாரித்து ஆதரங்களைச் சேகரித்து வந்த சுபோத் குமார் சிங்கை குறிவைத்துத் தாக்கினர். அதோடு மட்டுமல்லாமல் அவரது கண்களைக் குறிவைத்து சுட்டனர்.

சுபோத்குமார் சிங் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் போது, அவரை மீட்டு நாங்கள் (காவல்துறையினர்) மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம். ஆனால் அதை அறிந்த அந்த கும்பல் சிகிச்சைக்குக் கொண்டு செல்ல விடாமல் தடுத்து மீண்டும் சுபோத்குமார் சிங் மீது தாக்குதல் நடத்தியதோடு, எங்கள் மீது தாக்குதலைத் தொடுத்தனர். அதன் பின்னர் நாங்கள் அவரை விட்டு விட்டு தப்பி ஓடி வந்தோம். இந்தக் கலவரம் திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக சுபோத்குமார் சிங்கைக் கொல்வதற்காக நடத்தப்பட்ட கலவரமாகவே தெரிகிறது" என தெரிவித்துள்ளனர்.

இந்தக் கலவரம் மற்றும் சுபோத்குமார் சிங் படுகொலை குறித்து ஆர்எஸ்எஸ், பஜ்ரங்தள், ஹிந்து யுவா வாஹினி அமைப்புகளை சேர்ந்த 27 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் முதன் முதலில் மாட்டுத் தோல் இருப்பதாக சுபோத்குமாருக்கு தகவல் தெரிவித்து வரவழைத்த பஜரங்தளைச் சேர்ந்தவரை முதல் குற்றவாளியாக சேர்த்திருக்கின்றனர். ஆனால் யாரையும் பா.ஜ.க. அரசு கைது செய்யவில்லை என்பதே கசப்பான உண்மை. குற்றவாளிகள் பகிரங்கமாக உலா வருகின்றனர். இது தற்போது குமார் சிங்கின் குடும்பத்தினரை அச்சமடைய வைத்துள்ளது.

"என் கணவர் கொல்லப்பட்டு இவ்வளவு நாட்களாகியும் யாரும் கைது செய்யப்படவில்லை.

முக்கியக் குற்றவாளிகள் என்று தெரிய வந்துள்ள பா.ஜ.க. பிரமுகர் ஷிகார் அகர்வால், பஜ்ரங்தள் நிர்வாகி யோகேஷ் ராஜ் ஆகியோர் சுதந்திரமாக உலவி வருகின்றனர். நான் முதல்வர் ஆதித்யநாத்தைச் சந்தித்து, எனது துயரத்தைப் பகிர்ந்து கொண்டேன். அப்போது எனக்கு ஆறுதல் கூறிய யோகிஜி, என் கணவரைக் கொன்றவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று உறுதி அளித்தார். ஆனால் அவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. இது எனக்குப் புரியவில்லை. இந்த வழக்கில் கைது நடவடிக்கை எடுக்கப்படாததால், குற்றவாளிகள் சாட்சியங்களை அழித்துவிடலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது". இவ்வாறு ஆதங்கப்பட்டுள்ளார் சுபோத்குமார் சிங்கின் மனைவி ரஜினிசிங்.

இதனிடையே, இந்துத்துவ பயங்கரவாதிகளைக் கைது செய்யாத ஆதித்யநாத் அரசு, மஹாவ் கிராமத்தில் மாடுகளை வெட்டி இறைச்சியைத் தொங்கவிட்டதாகக் கூறும் விசயத்தில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட 4 அப்பாவி முஸ்லிம்களுடன் தற்போது மேலும் மூன்று பேரைக் கைது செய்திருப்பது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது போலுள்ளது.

இதன் பின்னாலுள்ள மாட்டரசியல் கீழ்த்தரமானது. இவ்வரசியல் நேர்மையான காவல்துறை அதிகாரியையே பலி வாங்கியுள்ளது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் "பசு காவலர்கள்" என்ற பெயரில் காவி குண்டர்கள் தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாவதைப் போல காட்டுமிராண்டித்தனமாக அதிகாரத்தைக் கையிலெடுத்துக் கொண்டு அப்பாவி மக்களைத் தாக்குவதும் கொல்வதுமென தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது. இந்துத்துவா அரசியலைக் கொள்கையாகக் கொண்ட மத்திய அரசின் துணையோடு இத்தகைய அட்டூழியங்கள் அரங்கேறி வருகின்றன.

மாட்டரசியலின் நாட்கள் எண்ணப்படுகின்றன. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்துக் கொடுத்துள்ள மனித உரிமைகளை நிலைநாட்டும் வண்ணம் பன்முகத் தன்மை கொண்ட இந்திய நாட்டில் மாற்று மதச்சார்பற்ற அரசியல் அதிகாரத்தை 2019ல் அமர வைக்க வேண்டியது காலத்தின் அவசியம்.

- **பெரணமல்லூர் சேகரன்**

## காஷ்மீரில் உயிரிழந்த 40 ராணுவ வீரர்களுக்கு அஞ்சலி





*காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தில் தற்கொலைப் படை தாக்குதலில் உயிரிழந்த 44 துணை ராணுவப் படையினருக்கு 19.02.2019 அன்று மதுரை மாவட்டத்தில் ஜாக்டோ-ஜியோ சார்பாக மெழுகுவர்த்தி ஏந்தி நினைவேந்தல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் க.நீதிராஜா, சந்திரன், சுப்பையன் ஆகியோர் தலைமையேற்றனர். மாநில உயர்மட்டக்குழு உறுப்பினர் ஆ.செல்வம் அஞ்சலி உரையாற்றினார்.*



**கிருஷ்ணகிரி**

**இரத்ததானம் செய்வோம் உயிர்களை காப்போம்!**

# 'நான் செல்வம் வகையறா”

# (கைதி எண்:3241 - நினைவலைகள்) நீதிமன்றக் காவல்

நள்ளிரவு 12.30 மணி. காவல் துறை வாகனத் திற்குள் நான் உட்பட 23 பேர் உட்கார்ந்திருந்தோம்.

இந்தோ பாருங்க. உங்களுக்குத் தெரிஞ்ச யாரவது நாலு பேர வரச் சொல்லி, அவங்கள கையெழுத்து போடச் சொல்லுங்க. இல்லாட்டி இங்கேயே கொசுக் கடில கிடக்க வேண்டியது தான். தல்லாகுளம் காவல் உதவி ஆய்வாளர் அழகுமுத்து ஆவேசமாக கத்தினார்.

நாங்க என்ன செய்வது? இப்போ வந்து எங்க கிட்ட சொல்றீங்க. மணி இரவு 12.30 ஆகுது. யாரும் அலைபேசிய எடுக்க மாட்டீங்கறாங்க. சுகாதாரப் போக்குவரத்துத் துறை நடராஜன் காட்டமாக பதில் சொன்னார்.

காவல்நிலைத்துக்கு வெளில நாலு பேரு நிக்கிறாங்க. உங்க ஆளுங்கதான். அவங்கள கூப்பிடுங்க என்றார் அந்த உதவி ஆய்வாளர்.

அவர்கள் யாரென்று எங்களுக்குத் தெரியாது. பதில் சொன்னார் தியாகராசா பொறியியல் கல்லூரி ராம்தாஸ்.

அப்படீன்னா இங்கேயே கிடங்க என்று கோபமாகக் கொக்கரித்து விட்டு வாகனத்திலிருந்து வெளியேறினார் உதவி ஆய்வாளர்.

அதிகாலை 2.00 மணி.

எல்லோரும் கீழே வாங்க. வரிசையா நில்லுங்க. பேர் வாசிப்பாங்க. அப்பா பேர் முகவரி எல்லாம் சரியா இருக்கான்னு சொல்லுங்க. உதவி ஆய்வாளர் அழகுமுத்து அழைத்தார்.

தல்லாகுளம் காவல் நிலையத்திற்குள் அனைவரும் வரிசையாக நின்றோம். செல்வம், தாஸ், ஜெயராமன், குணாளன், மோசஸ் தயாளன், அன்பழகன், சூர்யபிரகாஷ், சிவக்குமார், பரமன், பிரபாகரன், ரமேஷ், சரவணப்பெருமாள், கர்ணன், யத்தீஷ்வரன், ஜெயராஜராஜேஸ்வரன், ராம்தாஸ், நடராஜன், மூர்த்தி, சந்திரசேகர், கருப்பையா, சின்னசாமி, இளஞ்செழியன், அமல்ராஜ், துரை என ஒவ்வொரு பெயராக வாசிக்க அப்பா பெயர், அம்மா பெயர், மனைவி, மகன் பெயர், முகவரி எல்லாவற்றையும் சொன்னோம்.

என் பெயரைச் சொல்லிவிட்டு வெளியே வரும் போது உசிலம்பட்டி சத்துணவு ஊழியர் அய்யங்காளை வெளியே நின்றிருந்தார். என்ன தோழர் இங்கே, உங்களையும் கைது பண்ணிட் டாங்களா? என்று கேட்டேன். அவரின் மனைவி இறந்து இன்னமும் 30 நாட்கள் கூட ஆகல. அதற் குள்ள உரிமைக்கான போராட்டத்தில் உணர்வோடு கலந்து கொண்டவர். இப்படி எத்துணை, எத்துணை அய்யங்காளைகள் தன்னலம் துறந்து இந்த ஊழியர்களுக்காகவும், இந்த சமூகத்திற்காகவும் பாடுபடுகிறார்கள். அவரை நினைக்கும் போதே மெய்சிலிர்த்தது.

இல்லை தோழர் குழந்தைகள் தனியாக இருக்காங்க. என் மனைவியின் 27-ம் நாள் காரியம் இன்று. அதனால் என்னை மட்டும் விடுவிக்கச் சொல்லி காவல் ஆய்வாளரிடம் கேட்டேன். அதனால் என்னை மட்டும் தனியே அழைத்து வந்தார்கள் என்று முடித்தார் அய்யங்காளை.

சரி குடும்பத்தைப் பாத்துக்கோங்க என்று சொல்லி வெளியே வந்தேன். அப்புறம் தான் தெரிஞ்சது. அய்யங்காளையின் இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்ட தல்லாகுளம், காவல் ஆய்வாளர், கைது செய்யப்பட்ட அனைவரின் பிரதிநிதியாக இவரிடம் கையெழுத்துப் பெற்றுக் கொண்டார் என்பது.

அதிகாலை 2.30 மணி.

மதுரை, தல்லாகுளம் காவல் நிலையத்திலிருந்து 17 அரசுஊழியர்கள் மற்றும் 7 ஆசிரியர்களுடன் காவல் துறை வாகனம் கிளம்பத் தயாரானது. எல்லாப் கோப்புகளையும் எடுத்துட்டீங்களா? அப்புறம் அங்க வந்து அது இல்ல, இது இல்லன்னு சொல்லி கடுப்ப கிளப்பக் கூடாது. தல்லாகுளம் காவல் ஆய்வாளர் பெத்துராஜ் அலுப்புடன் காவலர் களுக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருந்தார்.

மனுசன் ஒரு வாரமாவே சரியா தூங்கல. 22.01.2019 முதல் அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டம் ஆரம்பித்ததிலிருந்து, ஆர்ப்பாட்டம், மறியல், முதல்வர் வருகை, பிரதமர் வருகை என மதுரையே அல்லோல, கல்லோலப்பட்டிருந்த நேரம். அந்த மனுசனின் மொத்தக் கடுப்பும் அரசு ஊழியர், ஆசிரியர் மீது திரும்பி இருந்தது.

அதற்குக் காரணம் இரண்டு நாட்களுக்கு முன் இங்கு நடந்த சம்பவம் தான். 25.01.2019 மூன்றாம் நாள் மறியல். தமுக்கம் மைதானத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் கைது செய்து தங்க வைக்கப்பட் டிருந்தனர். சாயங்காலம் 4.30 மணிக்கெல்லாம் அனைவரையும் விடுதலை செய்வதாக காவல்துறை அறிவித்தது. அங்கிருந்த பலர் கலைந்து சென்ற போது, காவல்துறை மொத்தமாக தமுக்கம் உள்ளரங்கிற்குள் வந்து உங்களில் பத்து பேரை கைது

செய்யப் போகிறோம். மற்றவர்கள் எல்லாம் செல்லலாம் என காவல்துறை உதவி ஆணையர் அசோகன் சொன்னது தான் தாமதம். அன்னிக்கு, மாநிலம் முழுவதும் கைது நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்தபோது, ஜல்லிக்கட்டு போராட் டம் மாதிரி எங்களை கைது செய்து விட்டு எங்கள் தலைவர்களைக் கைது செய்யுங்கள் என நூற்றுக்கணக்கான பெண் ஆசிரியர், அரசு ஊழியர் சொந்தங்கள் தலைவர்களைச் சுற்றி நின்று கோசங்களை எழுப்ப, 6 மணிக்கு மேல் பெண்களை இருட்டில் அடைத்து வைத்தது தவறு என இந்திய ஜனநாயக மாதர் சங்கம் குடும்பத்துடன் களத்தில் குதித்து தமுக்கம் மைதானத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்ய, எங்களின் எதிர்கால வாழ்விற்கான போராட்டம் நடத்தும் அரசு ஊழியர், ஆசிரியர்களை கைது செய்வதா என இந்திய மாணவர் சங்கம், இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் மற்றும் வழக்கறிஞர் சங்கம் என அனைவரும் களத்தில் குதித்தனர். எல்லாவற்றிக்கும் மேலாக அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத்தினரும் அங்கே திரண்டனர். குறிப்பாக மாநில பொருளாளர் என்.ஜெயச்சந்திரன். மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பார்வையும் மதுரையின் மீதுதான் இருந்தது. ஊடகங்களில் நேரடி ஒளிபரப்பு போய் கொண்டிருந்தது.

இரவு மணி 11.30. விடிந்தால் குடியரசு தினவிழா. வேறு வழியில்லாமல் தலைவர்களை கைது செய்ய மாட்டோம் அனைவரையும் விடுவிக்கிறோம் நீங்கள் செல்லலாம் என காவல் துறை அறிவித்த உடன் உற்சாகப் பெருமிதத்துடன் பெண் ஆசிரியர், அரசு ஊழியர் பெருமக்களும், எங்களுக்காக இரவு முழுவதும் கடுங்குளிரிலும் வாசலில் நின்று போராடிய பல்வேறு வெகுஜன அமைப்புக்களுக்கும் நன்றி கூறி அனைவரையும் உடன் கலைந்து செல்ல அறிவுறுத்தி விட்டு நடராஜன் அவர்களின் வாகனத் தில் ஒரு மறைவான இடத்தில் தங்குவதற்காக சென்றேன். ஏனென்றால் வீட்டுக்குச் சென்றால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்ற பெயரில் கைது செய்யப்படக் கூடும் என்பதால்.

ஆனால், அங்கு சென்ற கொஞ்ச நேரத்தில் மதுரையில் 9 பேர் காவல் துறையால் நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர் என்ற தகவலை ஊடகங் களில் பார்த்தபோது தான் காவல்துறையின் குள்ள நரித் தனம் புரிந்தது. நான், செல்வம், நீதிராஜா ஆகி யோர் அந்த மறைவிடத்திலிருந்தோம். நீதிராஜாவின் செயல்பாடு பிரம்மிக்கத்தக்க வகையில் இருந்தது.

இரவு 1.30 மணி.

நீதிராஜா நமக்காக வீதியில் நின்று போராடிய வழக்கறிஞர் முத்து அமலனாதனைத் தொடர்பு கொண்டார். மதுரைல 9 பேரை காவல்துறை கைது செஞ்சுட்டாங்க. உடனே காவல் நிலையத்துக்கு போக முடியுமா? என கேட்டார். கவலைப்படாதீங்க. நான் பாத்துக்கறேன். முத்து அமுதநாதன் சொன்னார்.

பின்னர் எண்ணிக்கை 12 ஆனது. அப்புறம் 15 ஆனது. அதிகாலை 3 மணி வரையில் யாரும் தூங்கல. அதிகாலை 2.30 மணிக்கு செய்தி வருகிறது. மருந்தாளுநர் சங்கத்தின் மாநில செயலாளர் முருகனை அவரின் வீட்டில் வைத்து கைது செய்தனர் என்று. 2003-யை போல் காவல் துறை தன் கோர முகத்தை காட்டியதை அப்போது தான் நாங்கள் உணர்ந்தோம். 26.01.2019 மற்றும் 27.01.2019 இரண்டு நாட்கள் தலைமறைவு வாழ்க்கை. வீட்டுக்கு கூட செல்ல முடியவில்லை.

வண்டிய மாசிஸ்திரேட் வீட்டுக்கு விடுப்பா. காவல் ஆய்வாளர் பெத்துராஜின் சத்தம் இரவில் கணீரென்று இருந்தது. அதிகாலை 2.45 மணி. பந்தய திடல் குடியிருப்புப் பகுதியில் உள்ள ஜுடீசியல் மாசிஸ்திரேட்-2 வீட்டிற்கு முன்னால் காவல்துறை வாகனம் நின்றது. அங்கே வெளியே நின்றிருந்த காவலரிடம் ஐயா கிட்ட நாங்க வந்திருக்கோம்ன்னு சொல்லு. கூடல் புதூர் ஆய்வாளர் சந்திரசேகரன் காவலரிடம் சொன்னார்.

பத்து நிமிட இடைவெளிக்குப் பின் நீதியரசர் வீட்டு வராண்டாவின் மின்விளக்கு எரிந்தது. ஐயா முழுச்சுட்டாரு, எல்லாரும் தயாரா இருங்க. காவலர் ஒருவர் எச்சரித்தார். எல்லோரும் அவரின் வீட்டு கதவையே வெறிச்சு பார்த்துக்கிட்டே இருந்தோம். சரியாக அதிகாலை 3.25 மணிக்கு சொர்க்க வாசல் திறப்பது போல் மாசிஸ்திரேட் வீட்டு கதவைத் திறந்து வெளியே வந்தார். உடனே அந்த இடத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

மாசிஸ்திரேட் எதிரி "செல்வம் வகையறா" எல்லாரையும் வரிசையாக நிப்பாட்டுங்கன்னு சொன்னார். மாசிஸ்திரேட் வாயால் செல்வம் வகையறான்னு சொன்னபோது அண்ணன் செல்வம் மனதில் பறந்துச்சு பாருங்க பட்டாம்பூச்சி. என்னோட முப்பது வருட சங்க வாழ்க்கைக்கு கிடைச்ச அங்கீகாரம்டான்னு புலகாங்கிதம் அடைஞ்சுட்டார் மனுசன்.

எதிரிகளுக்காக ஆஜராக வழக்கறிஞர் யாராவது வந்திருக்கீங்களா? மாசிஸ்திரேட் கேட்க ஆம் என்று தோழர் முத்து அமுதநாதன் முன்னுக்கு வந்தார்.

சரி அரசு வழக்கறிஞர்கள் மூன்று பேர் வந்துள்ளனர். முதுநிலையில் உள்ளவர்கள். அவர்களை அமரச் சொல்வதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே? என்று கேட்டார். ஆட்சேபணை ஏதுமில்லை என நமது வழக்கறிஞர் சொன்ன உடன் அரசு வழக்கறிஞர்களை அமரச் சொன்னார்.

குற்றம் சுமத்தப்பட்ட அனைவரும் தன் பெயர், மற்றும் அப்பா பெயரைச் சொன்னோம். எதிரி செல்வம் உங்க மீது என்னென்ன பிரிவுகளின் கீழ் வழக்கு பதியப்பட்டிருக்குன்னு தெரியுமா? மாசிஸ்திரேட் கேட்டார்.

தெரியாது சார். எங்க கிட்ட சொல்லவே இல்ல? அண்ணன் செல்வம் பதில் சொன்னார். அப்ப போலீசுல யாராவது ஒருத்தர் இதைப் படிங்க. மாசிஸ்திரேட் உத்தரவிட்டார். அவசர, அவசரமாக பக்கங்களைப் புரட்டிய காவல் துறை நண்பர் படிக்கத் திணறினார். நிறுத்துங்க, நிறுத்துங்க... அவங்க எல்லாருமே படிச்சவங்கதான். நீங்க யாராவது ஒருத்தர் வந்து படிங்க என்று மாசிஸ்திரேட் சொன்ன உடன் முன்னாடி ஓடிப் போய் நான் நின்னேன். சரி படிங்கன்னு மாசிஸ்திரேட் சொன்னார்.

***'இவ்வழக்கின் வாதியான முருகன் என்பவர், மதுரை மாநகர் டி-1 தல்லாகுளம் (ச.ஒ) காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்து வருவதாகவும், இன்று 28.01.2019-ம் தேதி காலை 11.00 மணியளவில் வாதி, பெ.த.கா.276 திருமதி வீரதங்காள், செல்லூர் காவல் நிலைய த.கா.2698 திரு நாராயணன், காவலர் 154 திரு பாலசுப்பிரமணியன் மற்றும் ஆயுதப்படை பெ.காவலர் 2362 திருமதி அருண்மொழிசுமதி, காவலர் 1284 திரு நதீஸ்வரன், ஆகியோருடன் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், பாதுகாப்பு பணியில் இருக்கும் போது...ன்னு"***

ஆரம்பிச்சு' ***எனவே எதிரிகளின் மீது இந்திய தண்டனைச் சட்டம் விதி 143,341, 353, 505(1)(பி) மற்றும் CLA Act 7(1)(யு)-ன்கீழ் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளதுன்னு"*** முடிச்சேன்.

காவல்துறை உங்களைத் துன்புறுத்தினாங்களா. மாசிஸ்திரேட் கேட்டார்.

இல்லை சார். செல்வம் பதிலளித்தார். ஆனால் ரோட்டை எல்லாம் மறிக்கலை. ஆம்புலன்சையும் மறிக்கலை. மாவட்ட ஆட்சியர் வளாகத்துக் குள்ளேயே எங்கள கைது பண்ணிட்டாங்கன்னு செல்வம் சொன்னார்.

அது இருக்கட்டும் மதுரை காவல் ஆணையர் அவர்கள் 24.01.2019-இல் ஒரு சுற்றறிக்கை அனுப்பி இருக்கார். அதைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? மாசிஸ்திரேட் கேட்டார்.

தெரியாதுன்னு செல்வம் சொன்னார். சட்டம் தெரியாது என்பது சட்டப்படி குற்றம் தெரியுமா?ன்னார் மாசிஸ்திரேட்.

அந்த சுற்றறிக்கை மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளீர்களா? தடை பெற்றுள்ளீர்களா? மாசிஸ்திரேட் கேள்விக் கணைகளைத் தொடுக்கும் போதே, சரிப்பா... இன்னிக்கு நம்ம வேலை முடிஞ்ச மாதிரித்தான். ஐயா, ஒரு முடிவு பண்ணிட்டாரு. இவங்களுக்கு ஜெயில் தான். காவலர் ஒருவர் முணுமுணுத்தார். நம் தரப்பு நியாயங்கள் எதையும் கேட்காமல் உங்களை 11.02.2019 வரையில் நீதிமன்றக் காவலில் வைக்கிறேன். எல்லோரும் கிளம்புங்கள் என்று சட்டென்று சொல்லிவிட்டு கூட்டிட்டுப் போங்கன்னுட்டார். ஒரு நிமிடம் அங்கு நின்றிருந்த 24 பேர் முகத்திலும் ஈயாடல. மயான அமைதி அனைவரையும் தொற்றிக் கொண்டது. நான் உட்பட. நீதிமன்றக் காவல் என்ற உடனே காவலர் களின் அணுகுமுறையிலும் சில வித்தியாசங்கள் தெரிந்தது. வாங்க. அங்கேயே நிக்காதீங்க. வேகமா வாங்க. அவங்களோட பேசக் கூடாது. உடனே வண்டில ஏறுங்க. கெடுபிடிகள் பறந்தன.

யாரும் கையில் எதையும் வைத்துக் கொள்ளக் கூடாது ஏதாவது இருந்தா இங்க யாராவது தெரிஞ்சவங்க இருந்தா கொடுத்திடுங்க. இல்லாடி எல்லாவற்றையும் பிடுங்கி வைத்துக் கொள்வார்கள். சிறைச்சாலைக்குள்ள இடுப்புல கட்டி இருக்கற அருணாக்கயிற கூட அனுமதிக்க மாட்டாங்க. அதனால் எல்லாத்தையும் இங்கேயே கொடுத்திடுங் கன்னு காவலர் ஒருவர் சொன்னார்.

என்னோடு பணியாற்றும் ஜெயகோபாலுக்கு ஏற்கனவே யத்தீஸ்வரன் தகவல் தெரிவித்திருந்தார். காரிருள் சூழ்ந்திருந்த அந்த நேரத்திலும் ஜெயகோபால் உணர்வோடு அங்கே மாஜிஸ்திரேட் வீட்டின் முன் வந்து நின்று கொண்டிருந்தார். எனது ஜோல்னா பை, இரண்டு அலைபேசிகள், என்னுடைய கையில் இருந்த பணம் எல்லாவற்றையும் ஜெயகோபாலிடம் கொடுத்தேன். சரவணாண்ணன், குணாளன், யத்தீஸ் அனைவரும் தங்களிடம் இருந்த பொருட்களை எல்லாம் ஜெயகோபாலிடம் கொடுத்தனர். அந்த நேரத்திலும் அங்கு வந்து எங்களுடைய பொருட்களை பெற்றுக்கொண்ட ஜெயகோபாலுக்கு நன்றி சொல்லி விட்டு வாகனத்தில் ஏறி கடைசி இருக்கையில் அமர்ந்தேன். என்ன ராஜா அமைதியாயிட்டிங்கன்னு கேட்டார் ராம்தாஸ். சிறைக்குச் செல்கிறோம் என்பதில் வருத்தமில்லை. ஆனால் குறைந்தபட்ச நியாயத்தைக் கூட கேட்காமல் நீதிமன்றக் காவல் என்று மாசிஸ்திரேட் சொல்லிட்டாரே. எங்கே நீதி இருக்கிறது. படித்த பண்பட்ட அரசு ஊழியம் செய்யும் நமக்கே இந்த கதி என்றால் சாமானியனுக்கு என்று நினைக்கிறபோது வேதனையாக இருக்கிறது.

2019-ல் நடைபெற்றுள்ள போராட்டம் கடந்த காலங்களில் கண்டிராத எழுச்சி. ஆம் அரசு ஊழியர், ஆசிரியர் கூட்டுப் போராட்டம் என்பது

தமிழகத்திற்கு ஒன்றும் புதிதில்லை. என்றாலும், 1978, 1985, 1988, 2002, 2003, 2016 மற்றும் 2017 என போராட்டக் கனல் தழைத்துக் கொண்டே போனாலும் 2019 ஒரு வித்தியாசமான அனுபவத்தை இன்றைய தலைமுறைக்குள் விதைத்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

1978 போராட்டம் - சிவஇளங்கோ தலைமையில் 100 சதவீத பங்கேற்புடன் முடிவேதும் இல்லாமல் முடிந்து போனது. 1985 ஜாக்டீ போராட்டம் - அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தீபஒளித் திருநாளைக் கூட சிறைச்சாலைகளில் கழித்த வரலாற்றுப் பதிவைச் செய்ததாக முன்னோர் கூறக் கேள்விப்பட்டிருக் கிறேன். 1988 போராட்டம் - ஆளுநர் பொறுப்பி லிருந்த போது 31 நாள் வீரம் செறிந்த போராட்டம். குதிரைப் படைத் தாக்குதல், சென்னை அண்ணா சாலை அரசு ஊழியர், ஆசிரியர் கட்டுப்பாட்டில் என சரித்திரம் படைத்த போராட்டம் என சொல்லக் கேள்வி. 2002 போராட்டம் தான் நான் முதன் முதலில் நேரடியாக பங்கேற்கும் போராட்டமாக களம் கண்டேன். தலைமையேற்ற தலைவர்கள் மட்டும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டு தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்ட சோகத்தை நேரில் கண்டேன். உடனிருந்தவர்களே காட்டிக் கொடுத்த கொடுமையும், அதற்கு எதிராக உரிமைக் குரலை உயர்த்தியவர்கள் மீது பொய் வழக்கு புனையப்பட்டு நீதிமன்றப் படிக்கட்டுக்களை நம் தலைவர்கள் மிதித்து அவ்வழக்கை தவிடு பொடியாக்கிய தருணங்களும் இன்னமும் பசுமரத்தாணி போல் என் கண்முன்னே நிழலாடுகிறது.

நான் பணியேற்ற காலகட்டத்தில் எனக்கு நினைவு தெரிந்த வரை சங்கத்திற்கு சந்தா செலுத்தியதாக நினைவில்லை. எனக்காக யார் செலுத்துவார்கள் என்றும் எனக்குத் தெரியாது. சொல்லப் போனால் சங்கத்திலிருந்து நிதி வசூலுக்காகவோ, சந்தாவிற் காகவோ வந்தார்கள் என்றால் உடனே அலுவல கத்தை விட்டு வெளியே சென்று விடுவேன். நான் பணியாற்றிய மதுரை வணிகவரித் துறை வளாகத்தில் மூன்று வழிகள் உண்டு. சங்கத்திலிருந்து பிரச்சாரத் திற்காகவோ அல்லது நிதி வசூலுக்காகவோ வந்தால் ஏதாவது ஒரு வழியாக வெளியே சென்று விடுவேன். ஒரு சில நாட்கள் அவர்களைத் தவிர்ப்பதற்காக கழிவறையில் போய் நின்றிருக்கிறேன் என்பதை இப்போது நினைத்தால் கூட வேதனையாகவும், வேடிக்கையாகவும் உள்ளது.

2003 போராட்டம், முதன்முதலில் துறைச் சங்கத்தின் மாவட்டச் செயலாளராகப் பொறுப் பேற்ற நான்கு மாதங்களுக்குள்ளாக 02.07.2003-இல் ஜாக்டோ-ஜியோவின் காலவரையற்ற வேலை நிறுத்தம். பல கனவுகளோடும், கற்பனைகளோடும் களம் கண்ட எனக்கு இரண்டே நாட்களில் போராட்டம் முடியப் போகிறது எனத் தெரியாது. 1985 போராட்டம், 1988 போராட்டம் என வீரவரலாற்றைக் கேட்டு உரமேறியிருந்த எனக்கு போராட்டம் துவங்கிய இரண்டு நாட்களிலேயே முடிந்தது வேதனையாகத் தான் இருந்தது. இப்படி இவர்களோடு சேர்ந்து நமது வாழ்க்கையும் வீணாய் போய்விட்டதே; பணிநீக்கம் செய்து விட்டார்களே; இனிமேல் சங்கமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். வெட்டிப் பயலுகள் என்று நினைத்தது உண்டு. ஆனால், 2004 நாடாளுமன்றத் தேர்தலில் அரசு ஊழியர்களின் ஆட்காட்டி விரலில் தீட்டப்பட்ட கருப்பு மையின் ஈரம் காய்வதற்குள் அரசையே புரட்டிப் போட்ட வரலாற்றைப் படைத்த போதுதான் சங்கத்தின் வலிமை என்ன என்பது எனக்கு புரிந்தது.

2004 மற்றும் 2006-ல் நாம் ஆற்றிய ஜனநாயக கடமையின் எழுச்சியை உணர்ந்திருந்ததால் தான், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தன்னந்தனியாக 2016ஆம் ஆண்டு இரா.தமிழ்செல்வியின் தலைமை யில் களம் கண்டு போராட்டத்தைத் துவக்கி பின் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி உள்ளிட்ட தோழமைச் சங்கங்களும் இணைந்து போராடிய போது, முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களாலேயே 110 விதிகளின் கீழ் சட்டசபையிலேயே 11 அறிவிப்பு களைப் அறிவிக்க வைத்தோம் என்பது வரலாறு.

அந்த காலகட்டத்தில் நான் பணியாற்றிய வணிகவரித் துறைச் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக 21 நாட்கள் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இராமமூர்த்தி உண்ணாவிரதத்தில் இருந்தபோதே உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு இயற்கை எய்தினார். அன்னாரின் மனைவி ஏற்கனவே 2015-ல் இறந்திருந்த நிலையில் அவர்களின் இரண்டு பெண் குழந்தைகளும் ஆதர வற்றவர்களாய் நின்றபோது, நம் போராட்டத்தின் விளைவாக அரசு ஊழியர்களின் குடும்ப நல நிதி ரூ.1.50 லட்சத்திலிருந்து ரூ.3.00 லட்சமாக உயர்த்தப்பட்டு, அந்த குழந்தைகளின் எதிர்கால வாழ்விற்கான ஆதாரமாக அத்தொகை உதவியது என்பது நினைவு கூறத்தக்கது. அதேபோல் கருணை அடிப்படையிலான பணி நியமனம் பெற்றவர்களின் பணிவரன்முறை தொடர்பான அரசாணை எண்.80 உள்ளிட்ட பல கோரிக்கைகளை வென்றெடுத்தோம்.

அதே போலத்தான் 2017ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டம் என்பது தலைவர்கள் நடத்திய போராட்டமல்ல. முதல் இரண்டு நாட்களுக்குள்ளாக போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை விதித்தபோது, தடையை மீறி போராட்டம் நடத்த வேண்டுமென

கீழிருந்த ஊழியர்களிடமிருந்து வரப்பெற்ற அழுத்தத்தின் காரணமாகவே போராட்டம் தொடர்ந்து நடைபெற்று, ஊதிய மாற்றத்தைப் பெற்றோம்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க நிருவாகியாகி 10 ஆண்டுகள் நிறைவு செய்துள்ளேன். 2007-இல் அரசு ஊழியர் சங்கம் என்னை கண்டெடுத்த பின், என்னுள் ஏற்பட்ட மாற்றம், ஒரு நேர்மையான, பொறுப்புள்ள அரசு ஊழியனாக, நல்ல சிந்தனாவாதியாக, தவறுகளைத் தட்டிக் கேட்கும் துணிவுள்ளவனாக, மற்றவர்களின் துன்பங்களில், துயரங்களில் ஓடிச் சென்று பங்கேற்பவனாக, நல்ல தொண்டனாக, என்னுள்ள இவ்வளவு பெரிய தலைமைப் பண்பு உள்ளது என்பதை உணர்ந்தவனாக நான் மாறினேன் என்பதை இப்போது நினைத்தால் மெய் சிலிர்க்கிறது. 2008-ல் என்னுடைய துறை ரீதியிலான பிரச்சனையில் என் தோளோடு, தோள் நின்று பல்வேறு எதிர்ப்புகளையும் மீறி எனக்கு எட்டு மாத கால ஊதியத்தை சங்கத்திலிருந்தே வழங்கி, நமக்கு கிடைத்திருக்கும் பொக்கிஷம் ராஜேஸ்வரன், இளம் துருக்கியர் என்றெல்லாம் என்னை வர்ணித்து என் தலைமைப் பண்பை வளர்த்தவர்களுள் ஒருவராக இருந்த செல்வம் தலைமையிலேயே சிறை சென்றது மட்டுமல்ல, வரலாற்றில் "எதிரி செல்வம் வகையறா" என்ற வழக்கிலும் அவரோடு இணைந்திருப்பதை நினைத்தும், நாங்கள் சிறை வைக்கப்பட்டிருந்த அறை சுதந்திரப் போராட்ட காலத்தில் காமராசர், கக்கன், முத்துராமலிங்கத் தேவர் மற்றும் தோழர் பி.இராமமூர்த்தி ஆகியோர் இருந்த அறை என்பதை நினைத்தும் பெருமை கொள்கிறேன்.

தற்போது நடைபெற்றுள்ள போராட்டம் சரியான நேரமில்லை எனவும், மக்களிடம் நிறைய கோபம் உள்ளது எனவும், போராட்டம் தோல்வியில் முடிவடைந்துள்ளது எனவும் ஒரு சிலரால் தெரிவிக்கப்படுகிறது. நிச்சயமாக அதை நான் மறுக்கிறேன். சரியான நேரத்தில் தான் போராட்டத்தைத் துவக்கியுள்ளோம். போராட்டம் வெற்றி, தோல்வியின்றி நிறைவு பெற்றாலும் கூட, ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் அரசிற்கு எதிராக கடுமையான கோபத்தை விதைத்துள்ள போராட்டமாக இப்போராட்டம் அமைந்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அறுவடைக்காலம் கூட 2003-யை போல் வெகுதொலைவில் இல்லை. இரண்டு மாதங்கள் தான், தயாராவோம். உரிமைக்கான நம் போராட்டத்தில் நாம் அனைவரும் ஓங்கி குரல் எழுப்பியபோது, நம் குரல்வளைகளை நெரித்தவர்களின் கணக்கைத் தீர்க்கத் தயாராவோம். நிறைவாக தணிகை செல்வன் அவர்களின் வரிகளோடு நிறைவு செய்கிறேன்.

சரித்திரம் சுழலும் போதும்
சமுத்திரம் குமுறும் போதும்
பொருத்தவன் பொங்கும்போதும்
புயல்காற்று வீசும் போதும்
பறித்தவன் ஆதிக்கத்தை
பசித்தவன் எதிர்க்கும்போதும்
மறித்தவன் எவனும் இல்லை
மறுப்பவன் உலகில் இல்லை.

- தணிகை செல்வன்

- **சு.ஜெயராஜராஜேஸ்வரன்**

## உனக்காக ஒரு முறை பேசிவிடு!

அன்பின் தோழியே!
உன்னால் கேட்க முடிகின்றதா?
அந்தக் குரலை - ஆம்
சர்வதேச பெண்கள் தினம்!

சகிக்க முடியாத அடக்குமுறைகளை
உடைத்து - ரொட்டி வேண்டும்!
சமாதானம் வேண்டும்! அதோடு
பெண் வாக்குரிமை வேண்டும்!
உடனே கிடைத்தா! இல்லையே!
அதுவும் ஒரு வரலாறுதானே!

காய்ந்த வயிற்றில் முளைத்த பசி
மங்கிய விழிகளில் பொங்கிய கனவு!
மாற்றம் வராதா? விரைவில் வரும் - என
துளைத்த கலிப்பின் துளைகளில்
ரீங்காரமிட்ட இனிய இசை!

நாடிநரம்புகள் நசுக்கப்பட்ட
நியூயார்க்கின் ஆயத்த ஆடைகளின்
இறுக்கத்தை தகர்த்து - வீதியில்
வெடித்தது சங்கிலி தொடரான போராட்டங்கள்!

இருப்புப் பாதையில் அழுத்தப்பட்டு
பிழிந்தெடுத்த பிடிகளை உடைத்து
நியூயார்க்கை அதிரவைத்தது! பெண்
தொழிலாளர்களின் எழுச்சிக் குரல்!

கனவுகளையும் திவாலாக்கி - பெண்களின்
கடைசி சொட்டு உதிரத்தையும் உறியும் -
தொழிற்சாலைகளின் முதலாளியை
நியூயார்க்கில் துளைத்தெடுத்தது
போராட்ட பெண்களின் ஆவேசக்குரல்!

டென்மார்க்... ஜெர்மன்...
நியூயார்க்... கோபன்ஹேகன்...

கோட்டையென முடிவிலாது
வெடித்து பெண்களின் கலகக்குரல் - விளைவு
விழ்ந்தது ஜார்ஜ் அரசு அன்று!

இன்று! அந்நிகழ்வு
தவிர்க்கவியலாமல் காற்றாலைகளாய் பரவி
உன் சுவாசத்தில் கலப்பதை
உன்னால் உரண முடிகின்றதா?

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற
நாசகர கொள்கையால் - அலுவலமே
வீடாக - தனது பணியின் இருக்கையே
உணவருந்தும் இடமாக! உன்
பணியிடம் தேடி வரும் தேனினீருக்கும்! நீ
தயக்கங்களை தாண்டி - உன் விருப்பத்தை
ஒலிப்பதை உன்னால் கேட்க முடிகின்றதா!
உரிமை பெறும் உணர்வை மறைக்க
யாரால் முடியும்! சொல்வாய் தோழியே!

நமக்கான உரிமை கிடைத்த - கிளாராஜெட்கினும்
பெண் தொழிலாளிதான் என்பதை
நிலைமைகள் உணர்த்தும் தருணத்திலாவது
பேசி விடு! ஏனென்றால் - நாம்
பேசததால் வந்த அவலம்!

வந்த அடக்குமுறைக்கு பதிலாக
சொந்த அடக்குமுறை எதற்கு?
கிளர்ந்தெழும் உணர்வுகளை - நமக்காக
போராடும் வர்க்கத்தோடு சேர்ந்து
பேசிவிடு - மார்ச் எட்டிலாவது!

உலகம் கேட்க விரும்புகிறது - தோழியே
உனக்காக ஒரு முறை பேசிவிடு!

- **எஸ்.தமிழ்ச்செல்வி**

---

# முடிக்கப்பட வேண்டிய மத்திய ஆட்சிக் கணக்கு

"எங்கள் ஆட்சியாளர்கள்
முதலாளிகளுக்குக்
கூட்டல் கணக்கையும்
எங்களுக்குக்
கழித்தல் கணக்கையும்
மட்டுமே கற்றுத் தந்தார்கள்"

- **கந்தர்வன்**

மத்திய அரசின் காலம் முடிவடையும் இத்தரு வாயில் அதன் கணக்கைத் தணிக்கை செய்ய வேண்டியுள்ளது.

இதுவரை மத்திய அரசு பின்பற்றி வந்த பெரு நிறுவன வர்க்க பாச நாசகர பொருளாதாரக் கொள்கைகள் உழைக்கும் மக்களின் வாழ்வைச் சீரழித்து அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை அதல பாதாளத்தில் தள்ளியது எனின் மிகையன்று.

எனவேதான் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையுள்ள உழைக்கும் மக்களின் விருப்பம் மத்திய ஆட்சி உடன் அகற்றப்பட வேண்டும் என்பதாகவே உள்ளது.

தமிழகத்தில் கஜா புயலால் வாழ்விழந்த விவசாயிகள், சாகர்மாலா திட்டத்தால் பாதிக்கப் படும் மீனவர்கள், பண மதிப்பிழப்பாலும் சரக்கு சேவை வரியில் தொழிலே அழிந்துபோன சிறு உற்பத்தியாளர்கள், வணிகர்கள், ஆண்டுக்கு இரண்டு கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு எனும் தேன் தடவிய வார்த்தைகளை நம்பி ஏமாந்த இளைஞர்கள், நீட் தனியார் கல்விக் கொள்கைக்குப் பலியான மாணவர்கள், பசுக் குண்டரகளால் வேட்டையாடப் படும் முஸ்லீம்கள், நாடு முழுவதும் பா.ஜ.க.வினர் மற்றும் சங் பரிவாரங்களால் பாலியல் வன்மம் செய்யப்பட்டு விரக்தியின் விளிம்பில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள், பணி நிரந்தரம், குறைந்தபட்ச ஊதியம் அனைத்தையும் இழந்து வரும் தொழிலாளர்கள், அறிவியலைப் பேசினாலே அச்சுறுத்தப்பட்டுக் கொல்லப்படும் அறிஞர்கள் எனத் தொடரும் அவலங்களைத் தடுத்து நிறுத்துவதே அனைவரின் விருப்பமாக உள்ளது. மத்திய பாசிச கார்ப்பரேட் அரசு அகல வேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

மத்திய ஆட்சியை மக்கள் எந்த அளவிற்கு வெறுக்கிறார்களோ அந்த அளவிற்குப் பன்னாட்டு முதலாளிகளும் தரகு முதலாளிகளும் இவ்வரசை நேசிப்பதோடு நீடிக்கவே விரும்புகிறார்கள். இந்திய மக்கள் தொகையில் பாதிப்பேருடைய சொத்து ஒன்பது முதலாளிகளின் சொத்துக்குச் சமம் என்கிறது 2019ல் வெளிவந்திருக்கும் எக்ஸ்பிரஸ் ஆய்வு. 2014 முதல் 2018 வரை வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற வங்கிக் கொள்ளையர்கள் 23000 பேர் என்கிறது 10.03.2018 தேசிய 'எக்கனாமிக்ஸ் டைம்' நாளிதழ். அவர்களுள் நிதின் சந்தேசரா 5000 கோடி, ஜதின் மேத்தா 6712 கோடி, மெகுல் சோக்சி 405 கோடி, நீரவ் மோடி 22000 கோடி என அத்தனை பேரும் மோடியின் நண்பர்களான குஜராத் திருடர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கும்பமேளாவிற்கு 5000 கோடி, மோடி உலகம் சுற்ற 4000 கோடி, விளம்பரச் செலவுக்கு 3000 கோடி, புல்லட் ரயிலுக்கு 1.1லட்சம் கோடி, கார்ப்பரேட் கடன் தள்ளுபடிக்கு 2.4 லட்சம் கோடி என மக்கள் வரிப்பணத்தை வாரியிறைத் துள்ளது மத்திய அரசு.

ஸ்டெர்லைட் நச்சு ஆலை எளிய மக்களின் வாழ்வைச் சூறையாடி வருவதற்கு முற்றுபுள்ளி வைக்க 99 நாட்கள் போராடி நூறாவது நாளில் காக்கை குருவிகளைப் போல் சுடப்பட்டு 14 பேரைக் களபலி கொடுத்த பின்பும் ஆலையைத் திறக்க ஏற்பாடு நடப்பதிலிருந்தே ஆட்சியாளர்களின் வர்க்க பாசம் புலனாகும். ஹைட்ரோகார்பன், மீத்தேன், எண்ணெய் கிணறுகள் என காவிரிப் படுகை மாவட்டங்களின் இயற்கை வளங்களைச் சூறையாட மத்திய அரசு மாநில அரசின் துணையுடன் களமிறங்கியுள்ளது கண்கூடு. 'சோழ மண்டலம் சோறுடைத்து' என்பதைப் பொய்யாக்க பொய்யர் களின் ஆட்சி கணஜோராய் செயல்படுகிறது.

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக் குவது, விளை பொருளுக்கு உற்பத்திச் செலவை விட ஒன்றரை மடங்கு விலை நிர்ணயம் செய்வது, கருப்புப் பணத்தைப் பறிமுதல் செய்து மக்களின் கணக்கில் ரூபாய் பதினைந்து இலட்சத்தை வரவு வைப்பது உள்ளிட்ட பல வாக்குறுதிகள் நீர் மேல் எழுத்தானது. பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் உயிரிழந்தோர், சரக்கு மற்றும் சேவை வரியால் சிறுதொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு தற்கொலை செய்து கொண்டோர், வேளாண்மை பொய்த்துத் தற்கொலை செய்து கொண்டோர் என அரிதான மானுட உயிர்கள் பலியாவது தொடர்கதையாகின.

இத்தகைய கொடுமைகளை அனுபவித்து வரும் மக்களைக் கவருவதற்காக சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய அரசின் 2019-20க்கான இடைக்கால பட்ஜெட்டில் இடைக்கால நிதியமைச்சர் பியூஷ் கோயல் வெற்று அறிவிப்புக்களை அள்ளி வீசியுள்ளார்.

12 கோடி சிறு விவசாயிகளுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.6000 வழங்குவது என்பது முக்கியமானது. இது மிகவும் அற்பத் தொகை என்பது ஒருபுறம் இருப்பினும் மறுபுறம் இத்தொகையே மூன்று தவணையாக வழங்கப்படும் என்பதும் முதல் தவணை 2000 ரூபாய் மட்டும் பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மார்ச் மாதத்திலேயே வழங்கப்படும் என்பதும் உற்று நோக்கத் தக்கது. அறிவிப்பில் நீர்ப்பாசனம் உள்ள பகுதியா இல்லாத பகுதியா என்றுகூட குறிப்பிடப்படவில்லை. மேலும் இதில் குத்தகை விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் இடப் பெறவில்லை. விவசாயத் தில் ஈடுபடுபவர்கள் உரிமையாளர்கள் இல்லாத பட்சத்தில் அவர்களுக்கு இதில் பயனேதுமில்லை.

இரண்டாவதாக முறைசாராத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டமும் கேலிக் கூத்தாகவே உள்ளது. இத்திட்டம் இன்று 60 வயதைக் கடந்தவர்களுக் கானதல்ல. குறைந்தபட்ச ஊதியத்தில் பாதி என்ற வகையில் பார்த்தாலும் குறைந்தபட்சம் மாதம் ரூ.5000 ஆவது கொடுக்க வேண்டும். ஆனால் அறிவிக்கப்பட்டிருப்பது ரூ.3000 மட்டுமே. இன்று 29 வயதாகும் தொழிலாளி வரும் 31 ஆண்டுகளுக்கு மாதம் ரூ.100 செலுத்தினால்,அவருடைய கணக்கில் இறுதியில் எவ்வளவு சேரும்? எட்டு சதவீத கூட்டுவட்டி என வைத்துக் கொண்டால், ரூ.1,50,000 தேறும். ஒரு தொழிலாளியின் இன்றைய சராசரி ஆயுட்காலத்தின் அடிப்படையில், அவர் 65 வயது வரை வாழ்வார் என வைத்துக் கொண்டால், அந்த ஐந்து ஆண்டுகள் அவர் அவரது சொந்த சேமிப்புப் பணத்திலேயே வாழ்ந்துவிட முடியும். இதில் அரசு கொடுக்கும் பணம் எங்கே வந்தது? அப்படியென் றால் இது ஒரு சேமிப்புத் திட்டமேயன்றி, ஓய்வூதியத் திட்டமல்ல. ஆனால் 10 கோடித் தொழிலாளர் களுக்கான ஓய்வூதியத் திட்டம் என்று கூச்சல் போடுவது வெறும் வாயால் மோடி வடை சுடுவதன்றி வேறில்லை.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் ரூ.1000 கோடி வெட்டப்பட்டுள்ளது. எளிய மக்களுக்குப் போய்ச் சேரும் இத்திட்டத்தை இழுத்து மூட மத்திய ஆட்சியின் ஆரம்ப காலத்திலேயே கடும் முயற்சிகளை மேற்கொண்டது மோடி அரசு. பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எழுந்த கடும் எதிர்ப்பு நடவடிக்கைகளால் சட்டப் படியான இத்திட்டத்தை வேண்டா வெறுப்பாகப் பெயரளவிற்கு அமுல்படுத்தி வருகிறது மத்திய அரசு. இத்திட்டத்தின் கீழ் வேலைகோரி வருவோர் பலரின் பெயர்களும் பதிவு செய்வதில்லை. பதிவு செய்தவர்களிலும் மிக்க குறைந்த விழுக்காட்டி னர்க்கே வேலை வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இத்திட்டத்தில் கட்டுமானப் பணிகளையும் சேர்த்து ஒப்பந்தக்காரர்களின் விருப்பத்திற்கு மனித நாட்கள் பயனாளிகளின் கணக்கில் திருடப்பட்டு வருகின்றன.

மொத்தத்தில் மத்திய அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கையில் உள்ள அறிவிப்புகள் மக்கள் சந்திக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வாகாது. ஐந்தாண்டுகளாகப் புளுகி வந்த டிஜிட்டல் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, ஸ்டேண்டு அப் இந்தியா போன்ற வெற்று வாய்ச் சவடால்களின் தொடர்ச்சியே அன்றி வேறில்லை.

எனவே அனைத்து அம்சங்களிலும் தோற்றுப் போன மத்திய அரசின் கணக்கு இத்துடன் முடிக்கப்பட வேண்டியது அவசியம். தவறினால் இந்தியாவை அனைத்து அம்சங்களிலும் மேலும் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னோக்கி நகர்த்தும் ஆபத்தாகிவிடும்.

- **பெரணமல்லூர் சேகரன்**

# போராட்ட நெருப்பில் பூத்த (கூட்டுறவு) மலர்கள்

1988 போராட்ட நெருப்பில் பூத்த மலர் "தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கம்" என்று தோழர் எம்.ஆர்.அப்பன் வர்ணிப்பார். அவரது வார்த்தைகள் மீண்டும் 2019-ல் மெய்ப்பிக்கப்பட்டது. போராட்டங்கள் சமூகத்தை மாற்றுகிறது ....கட்டமைக்கிறது...என்ற வார்த்தைகள் நிரூபணமாகியுள்ளது. ஜாக்டோஜியோ 2019 போராட்டம் ஆயிரக்கணக்கான போராளிகளை உருவாக்கியிருக்கிறது என்பதுதான் போராட்டத்தின் பிரதான வெற்றி., அந்த வகையில் கூட்டுறவுத் துறையில் கன்னியாகுமரி முதல் சென்னை வரை அனைத்து மாவட்டங்களிலும் கூட்டுறவுத்துறையின் தோழர்கள் போராட்டம் ஆரம்பமான 22.01.2019 முதல் முடிவுக்கு வந்த 30.01.2019 வரை களத்தில் நின்று போராடியதுடன் 19 தோழர்கள் சிறையையும் சந்தித்து வந்துள்ளனர். இவர்களில் 18 பேர் புதிய பென்சன் திட்டத்தில் உள்ள இளந்தோழர்கள் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

25.01.2019 அன்று நடைபெற்ற மறியலில் கலந்து கொண்டு மண்டபத்தில் அடைக்கப்பட்டு மாலை 7 மணியளவில் விடுதலை செய்யப்பட்டு வீட்டுக்கு சென்ற தருமபுரி மாவட்ட கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க தலைவர் தோழர் பழனியம்மாள் அவரது வீட்டருகே இரு சக்கர வாகனத்தில் சென்ற போது காவல் துறையால் கைது செய்யப்பட்டு தமிழகத்திற்குள்ளயே முதலில் கைதானவர் என்ற வரலாற்றை பதிவு செய்தார். அவரை தருமபுரி காவல் நிலையத்தில் பார்க்க சென்ற மாவட்டப் பொருளாளர் தோழர் குமார் என்பவரை காவல் நிலையத்திலேயே கைது செய்து (இரண்டாவது நபராக) தனது கோர முகத்தை காட்டியது காவல்துறை தோழர் பழனியம்மாள் கிருஷ்ணகிரி பெண்கள் சிறையிலும், தோழர் குமார் சேலம் மத்திய சிறையிலும் 25.01.2019 இரவு அடைக்கப்பட்டனர். இச்செய்தி தமிழகமெங்கும் கூட்டுறவுத்துறை ஊழியர்களிடையே கொந்தளிப்பை உருவாக்கியது.

28.01.2019 அன்று நடைபெற்ற மறியல் போரில் நாகப்பட்டினத்தில் மாநில தலைவர் தோழர் சௌந்தரராஜன் நாகை மாவட்ட செயலாளர் தோழர் ஜீவானந்தம், மாவட்டத் துணைத்தலைவர் ராஜ்குமார் ஆகியோரும் தேனி மவட்டத்தில் தோழர்கள் ராமகிருஷ்ணன், மாரிசாமி, ராஜாராம், விஸ்வன், ரவிக்குமார், சதீஸ், சரவணன், சிவகங்கை மாவட்டத்தில் தோழர் வினோத்ராஜா, விருதுநகர் மாவட்டத்தில் தோழர்கள் அந்தோனிராஜ், வெங்கடேசன் தூத்துக்குடி மாவட்டத்தில் தோழர்கள் வளன், சதீஸ்குமார், அசோக்குமார், அந்தோனிபட்டுராஜ் ஆகியோரும் கைதாகி சிறை சென்றனர். இவர்களில் தருமபுரி தோழர்கள் பழனியம்மாள், குமார் சிவகங்கை தோழர் வினோத்ராஜா, ஆகியோர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு 21.02. 2019 அன்று மீள பணியமர்த்தம் செய்யப்பட்டனர்.

- முதல்முறையாக சிறைக்கு சென்றாலும் அவர்களின் உறுதித்தன்மையும், எதிர்கால போராட்டத்தில் மேலும் தீவிரமாக இறங்குவோம் என்ற ஆவேச வார்த்தைகளும் போராட்டம் என்றும் தோற்றதில்லை என்பதை பறைசாற்றியது.

- போராடாத மாற்று சங்கத்தை சார்ந்த 33 தோழர்கள் வேலூர் மாவட்டத்தில் தன்னெழுச்சியாக போராட்டங்களில் கலந்துக்கொண்டு தங்களது உணர்வை வெளிபடுத்தியதும் மாற்றுச் சங்க மாநில தலைவரே தொலைபேசியில் போராட்டத்திற்கு போகாதே என்று பேசியும், கோரிக்கையின்பால் ஈர்க்கப்பட்டு இப்போராட்டத்தில் கலந்து கொண்டது மட்டுமல்ல அடுத்த தலைமுறைக்காக போராடும்" ஊழியர் சங்கத்தில் தான் இனி இருப்போம் என்று அவருக்கு பரிந்துரைத்து மாற்றுச் சங்க விலங்கை உடைத்து வெளிவந்துள்ளனர்.

பணியில் சேர்ந்து 5 முதல் 9 வருடம் வரை ஆன இளந்தோழர்கள் இப்போராட்டத்தில் அதிக பங்கேற்றதும் போராட்ட களத்தில் நாயகன், நாயகிகளாக உயர்ந்து நிற்பது மகிழ்ச்சிக்கும் மன நிறைவிற்கும் உரியது.. இவர்களின் போராட்ட கனலை அணையாமல் பாதுகாப்போம் ஸ அடுத்த கட்ட போராட்டகளத்தை எதிர்நோக்கி மாநில முழுவதும் காதிருக்கும் இளம் வீரர்களை நாம் வாழ்த்துவோம் ஸ

- எம்.சௌந்தரராஜன், மாநில தலைவா

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com